
# சார்வாகன்

சி. மௌனகுரு



சார்வாகன்

# பதிப்புரை

'மகுடம்' வெளியீட்டகத்தின் ஒன்பதாவது வெளியீடாக பேராசிரியர் சி.மௌனகுருவின் 'சார்வாகன்' குறுநாவலை தருவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மட்டக்களப்பு மண்ணின் கூத்துக்கலையின் ஒரு ஆதர்ஷமாக திகழும் பேராசிரியர் அண்மைக் காலமாக மிகத் தீவிரமாக இயங்கி வரும் செயற்பாட்டாளர். முதுமையிலும் இளமையாக சிந்தித்து செயற்படுபவர்.

கிராமிய மக்களுக்கான கலைவடிவமாக கருதப்பட்ட கூத்துக்கலையை மீள் உருவாக்கம் செய்து செம்மைபடுத்தி அதனை மேடைவடிவமாக்கி உலக அரங்குகளில் உலாவரச் செய்பவர்.

கூத்துக் கலையை நவீனமயமாக்கியதைப் போலவே இதிகாச புராண பாத்திரமான சார்வாகனை நவீன உலகிற்கு ஏற்ப மீள் உருவாக்கம் செய்துள்ளார் பேராசிரியர்.

கூத்து என்ற கலை வடிவத்திற்கு அப்பால் மட்டக்களப்பு மண்ணின் பழம் பெரும் கலைப்பொக்கிஷங்களை, கலைவடிவங்களை, இலக்கிய முயற்சிகளை, பல வடிவங்களில் பல தளங்களில் கொண்டு செல்வதற்கான அவரது அர்ப்பணிப்புமிக்க செயற்பாட்டின் இன்னுமொரு வடிவமே இந்த குறுநாவல்.

சார்வாகன்

யுத்தத்திற்கு எதிரான குரல்

அதாவது மக்களின் குரல்

யுத்தம் என்ற பெரும் புயல் எப்படி அரசுகளை வாழ வைப்பதற்காக மக்களை அழிவுக்குள்ளாக்குகிறது என்பதனையும் அரசயந்திரம் தனது ஆட்சி அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்வதற்காக மக்களை அடிமைகளாக்கி தம்வசம் இழுத்துக் கொள்கிறது. அவர்களுக்கு யுத்த போதையை தூண்டி எவ்வாறு பலி கொள்கிறது என்பதனையும் சார்வாகம் என்ற சிந்தனை மரபின் பிரதிநிதியாக வரும் சார்வாகன் மூலம் யுத்தத்திற்கு எதிரான தனது வலுவான கண்டனத்தை இங்கு பதிவு செய்கிறார் பேராசிரியர்.

மகாபாரத யுத்தம் எவ்வாறு பல லட்சக்கணக்கான மக்களை பலி கொண்டது. அதன் நீட்சியாக தொடரும் யுத்தங்களும் எவ்வாறு தொடர்ச்சியாக மக்களை பலி கொள்ளும் வேள்வித் தீயாக கொழுந்து விட்டு எரிகிறது என்பதை இக்குறுநாவலில் தெளிவுபட கூறுகிறார்.

சமூக அக்கறையும், மானுட நேசிப்பும் கொண்ட அத்தனை பேரும் யுத்தத்திற்கு எதிரானவர்களே. அவர்களால் மக்களை பலி கொள்ளும் இந்த யுத்தத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கு சார்வாகன் குரலாய் ஒலிப்பது பேராசிரியரின் குரலே.

அதுவே இன்றைய ஒட்டுமொத்த மக்களின் குரலாகிறது. பெரும் யுத்தத்தின் அவலங்களை தின்ற மக்களாக வாழும் எமது குரலும் இதுவே.

''ஒப்பந்தங்கள் மீறப்படும். யுத்தம் வரும். அதிகாரத்தின் இறுதி வடிவம். அது தான் யுத்தம் - ஆம் பெரும் யுத்தம்''

''மக்கள் எப்போது தான் போரை விரும்பினார்கள். அவர்கள் விரும்பியதெல்லாம் நிம்மதியான வாழ்வு. அமைதியான வாழ்வு, மகிழ்ச்சியான வாழ்வு, பிரச்சினை இல்லா வாழ்வு''

இந்த கூற்று சார்வாகனின் குரலாக ஒலித்தாலும் முழு மொத்த மனித ஜீவிதத்தின் குரலும் அதுவாகிறது.

பெரும் அவலங்களை சந்தித்த எமது மண்ணில் இருந்து வெளி வரும் முதல் யுத்தத்திற்காக எதிர்ப்புக் குரலாக நாம் சார்வாகனை அர்த்தப்படுத்தலாமா...?

வாழ்த்துக்களுடன்

**வி. மைக்கல் கொலின்**

(ஆசிரியர் - மகுடம்)

# 1



குருஷேத்திர யுத்த களம்

பாரதப் போருக்கு பாண்டவரும் கௌரவரும் தேர்ந்து எடுத்த இடம் சமந்த பஞ்சகம், பாரதப்போர் முடிந்து ஒரு மாத காலாமாகிவிட்டது.

கௌரவரும் பாண்டவர்களும் அவர்கள் சார்பில் ஆரியவர்த்தத்தைச் சார்ந்த அனைத்து கணங்களும் அரசுகளும் மோதிய வெட்டவெளி,

இலட்சக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கிய வெறுமையிலே தனித்துக் கிடக்கின்றது.

இரத்த ஆறு ஓடி உலர்ந்த பூமியிலே அழுகிய உடல்களின் பிணநெடி இன்னும் நாறிக் கொண்டுதான் இருந்தது.

சிறிய மலைகள் உருகி ஓடுவது போல இறந்த யானைக் குவியல்களிலிருந்து நிணம் ஒழுகிக் கொண்டிருந்தது.

குவியல் குவியலாக குதிரைகளின் கபாலங்கள்,

மண்டை ஓடுகள்,

தலைமயிர்கள்,

எத்திசை நோக்கினும் எலும்புகள், எலும்புகள், எலும்புகள்.

போர் முடிந்ததன் பின்னர் யுத்த பூமியை வெறித்து தினமும்

பார்த்துச் சென்ற பெண்களினதும் முதியவர்களினதும் கூட்டம் இப்போ வருவதில்லை.

யுத்த நாட்களில் மிக் வேகம் மிகுந்த மனிதர்கள் அசைந்து திரிந்த அப்பகுதியில் இன்று மனித நடமாட்டமே இல்லை.

குருசேத்திரத்தைச் சுற்றியிருந்த பத்துக் கிராமங்களிலும் வசித்த எவரும் இல்லை.

இரைச்சலோடு அலையும் வாயுவும் சில நாய்களும் மட்டுமே அக்கிராமங்களில்உயிர்ப்போடு நடமாடித் திரிகின்றன.

வெறுமை,

வெறுமை,

வெறுமை

எங்கும் வெறுமை நிறைந்திருந்தது.

மனித மனங்களின் குரோதங்களுக்குச் சாட்சியாக குருசேத்திரமும் காட்சி தந்து கொண்டிருந்தது.

மக்கள் நாட்டமேயில்லாத அந்த மயான பூமியில்
ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

யோக தண்டத்தை ஒரு கையால் பூமியில் ஊன்றிக் கொண்டு மறுகையை இடுப்பிற்பதித்தபடி அவன் நின்ற நிலை ஒரு சிற்பத்தை நினைவூட்டியது.

நாற்பது ஆண்டு பிராயத்தினன்,
கௌபீனதாரி,

உடல் முழுவதும் சாம்பல் பூச்சு,
கையிலே ஒரு தண்டம்,

சுடலையில் ஆடியபின் கேசங்கள் கலைய நிற்கும் ருத்ர சிவனை அவன் தோற்றம் நினைவூட்டுகிறது.

தலையின் சடாமுடிகள் மார்பிலும் முதுகிலும் தவழ,

சிவந்த கண்களால் யுத்த களத்தை வெறித்துப் பார்த்தபடி நீண்ட நேரம் அவன் நின்று கொண்டிருந்தான்.

சிந்தனா வயப்பட்டவனாக நிற்கும் அவன் வெகு தொலைவில் இருந்து நீண்ட பயணம் செய்தவன் போல தெரிகின்றான்.

வெறுமை நிறைந்த யுத்த பூமியில் தன்னந் தனியாக நிற்கும் அவனை ஒரு நாய் தூரத்திலிருந்து பார்த்துப் பயத் தொனியில் குரைக்கிறது. சார்வாகன் பார்த்த பார்வையில் அத்ன் குரைப்பு மெல்ல மெல்ல அடங்கி ஓய்கிறது

பின் தூரத்தில் ஓடிச்சென்று தன் முன்னங்காலைத் தூக்கி சிறு நீர் கழித்து விட்டு ஓடிச் சென்று சார்வாகன் பார்வையை விட்டு மறைகிறது.

அதைத் தினையளவுதானும் கவனிக்காதவனாக யுத்த களத்தைப் பார்த்தபடி அத்தினாபுரி நகரை நோக்கி அவன் செல்ல ஆரம்பிக்கின்றான்.

# 2



அத்தினாபுரம்

ஆரிய வர்த்தகத்தின் தலைநகர்

துரியோதனின் அரவக் கொடி பட்டொளி வீசிப் பறந்த பூமி.

இப்போது தருமனின் முரசக் கொடி பறந்து கொண்டிருக்கின்றது.

அரவக் கொடிக்குப் பழக்கப்பட்ட மக்கள் மெல்ல மெல்ல முரசக் கொடிக்கு பழக்கமாகிக் கொண்டு வருகின்றார்கள்.

அத்தினாபுரத்தின் ஆட்சி கைமாறிவிட்டது.

துரியோதனன் தனது தம்பிமாரோடும், கர்ணனோடும் நடந்தும் ரதத்திலும் கலகலப்பாகப் பவனிவந்த அத்தினாபுர வீதிகளில்

பாண்டவர்வளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் நடந்தும் ரதத்திலும் பவனிவருகின்றார்கள்.

யுத்த சோர்வு,

தம் உற்றார் உறவினரை இழந்த வருத்தம் எல்லார் முகங்களிலும்

மக்கள் முகங்களில் சோர்வும், வாட்டமும்,

அத்தினாபுர மக்களின் மகிழ்ச்சியைக் காலம் அடித்துக் கொண்டு சென்றுவிட்டது.

போர் தந்த இறுக்கமான மனோபாவம் அவர்களிடம் தளர்ந்துவிட்டது. எனினும் பாரதப்போர்ச் சிந்தனைகளிலிருந்து மக்கள் இன்னும் மீள வில்லை.

போரின் சாதக பாதகமான கதைகளிலும் இழப்பின் துயரங்களிலும் மக்கள் மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

சுவைத்துச் சாப்பிடுவதில் மக்களுக்கு நாட்டம் குறைந்திருந்தது. உயிர் வாழ்வதற்காகச் சாப்பிடுவது போல சாப்பாட்டை நினைக்கின்றார்கள்.

ருசிபேதம் நாவைவிட்டுச் சென்றுவிட்டது.

துயரமும் சோகமும் வெறுமையும் மனத்தை ஆக்கிரமித்திருக்கையில் நாவில் ருசி எப்படித் தோன்றும்?

துரியோதனனும் தம்பிமாரும் வாழ்ந்து சுகித்திருந்த அறைகளையும், மாளிகைகளையும் இடங்களையும் பாண்டவர்கள் ஐவரும் தமக்குள் பங்கிட்டுக்கொண்டார்கள்.

துரியோதனன் மாளிகையில் தர்மர் இருக்கிறார்.

துச்சாதனன் வீட்டை வீமன் தனதாக்கிக் கொண்டான்.

அத்தினாபுர அரண்மனைக்குள் பாண்டவர்களும், அவர் தம்மைச் சார்ந்தோரும் இருந்து கொள்ள கௌரவ குடும்பத்தினர் வேறு இடங்களில் ஒதுங்கிக் கொண்டனர்.

ஒருமாத காலம் பிதிர்களுக்கான பிதுர்க்கடன்கள் நடைபெற்றன.

இப்போது தருமனின் பட்டாபிசேகத்திற்கான ஆயத்தங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

உற்சாகமற்ற மக்களுக்கு உற்சாகமூட்டும் வேலைகளைச் செய்யும்படி புதிய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இந்தப் பின்னணியிலே அந்தக் குரல் மீண்டும் கேட்கிறது.

அந்தக் குரல் அத்தினாபுர வாசிகளுக்கு புதிய குரல் அல்ல.

நான்கு திசைப் பாதைகளும் சந்திக்கும் நடு மையத்திலே ஓங்கி வளர்ந்து கிளைபரப்பி நிழல் தந்து நிற்கும் பெரிய சடைத்த அரசமரத்தின் கீழ் அக்குரலுக்குரியவன் நிற்கின்றான்.

அம்மரத்தின் கீழ் மக்கள் கூட்டம் ஒன்று அக்குரலைச் செவிமடுத்தபடி நிற்கின்றது.

மக்கள் கூட்டத்தினுள் ஒருவராக பூர்சிரவஸ் நிற்கிறார்.

அறுபது ஆண்டு அவர் வாழ்ந்துவிட்டாலும் கட்டுக்குலையாத உடம்பு

ஏர்பிடித்து உழுதமையால் வலுவேறிய கையும் உடலும்

ஏர் பிடிக்காத காலங்களில் துரியோதனன் அரண்மனையில் வாயில் காவலன் வேலை. அரண்மனையில் சில காலமும் வயல்வெளியில் சில காலமுமான வாழ்க்கை. அத்தினாபுரத்தை உள்ளும் புறமும் அறியும் வாய்ப்பு அவருக்கு இருந்தது.

அண்மையில் நடந்து முடிந்த குருசேத்திர யுத்த களத்திலே அவரது வயது மூப்பு காரணமாக போரில் கலந்து கொள்ள அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. தன் எஜமானுக்கு விசுவாசத்தைக் காட்ட முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு. வயது மூப்பினால் சண்டைக்கு அவர் லாயக்கு அற்றவராகிவிட்டார். துரியோதனன் சேனையில் ஒரு பிரிவினருக்கு சமைத்து பரிமாறும் பரிசாரகராகத்தான் அவரின் போர்ப் பங்களிப்பு இருந்தது.

கௌரவர் பக்கம் தான் அவர் செயற்பட்டார்.

போரிலே தனது இரண்டு அன்புப் புதல்வர்களையும் தனது மூன்று மருமகன் மாரையும் இழந்தார். அவரோடு கணவன்மாரை இழந்த அவரது இரண்டு பெண்பிள்ளைகளும் மூன்று மருமக்களும் இருக்கின்றார்கள். இவர்களோடு அவர்களது சின்னஞ்சிறு பிள்ளைகளும்.

அவரது குடும்ப பெரியது.

ஐந்து ஆண்களை ஒரே நேரத்தில் இழந்தமை அக்குடும்பத்தின் அத்திவாரத்தையே உலுக்கியிருந்தது.

உற்சாகமாகத்தான் போரில் இறங்கினார்கள்.

மன்னன் துரியோதனுக்காக களத்தில் இறங்குவதை மகிமையாகத்தான் கருதினார்கள்.

போர்ப்பயிற்சி பெறும் போது பூரித்து போனார்கள்.

தன்கையால் சமையல் செய்து சேனைகளுக்கு பரிமாறுகையில் பூர்சி ரவஸ் தன் வாழ்வின் பயனை அடைந்துவிட்டதாக இறும்பூது எய்தினார்.

போர் முடிந்து யதார்த்த நிலைக்கு வந்தபின்னர்தான் இழப்பின் உக்கிரம் அவருக்குப் புரிந்தது.

எப்போதும் கண்ணீருடன் இருக்கும் அன்பு மக்களும் மருமக்களும் இழந்து தந்தையரை நினைத்து பேசும் பேரப்பிள்ளைகள். வாழ்வையே தொலைத்து விட்டது போல சோகம் அவரை வாட்டியது. வீட்டுப் பெண்களின் துயரம் தோய்ந்த முகங்களும் பெருமூச்சுகளும் வெறித்த பார்வையும் அவர் மனதில் பெரும் சலிப்பினை ஏற்படுத்தியிருந்தன. தந்தையரை அடிக்கடி நினைவுகூரும் பேரப்பிள்ளைகளின் குரல் அவருக்கு தாழமுடியாத துயரத்தையே தந்தது.

காலையில் தனது கடமைகளை முடித்துவிட்டு வீதிக்கு வந்த பூர்சிரவஸ் அந்தக் குரலால் கவரப்பட்டு தன்னை அறியாமலேயே நாற்சந்தியில் நிற்கும் அரசமரத்தடிக்கு வந்துவிட்டார்.

அந்தக் குரல் மீண்டும் கேட்கிறது.

அக்குரலையும் அக்குரலுக்குரியவனையும் அவரால் எளிதாக அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது

. இதே குரலை அவர் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் இதே அத்தினாபுர நகரில் இன்னொரு பகுதியிலே கேட்டிருக்கிறார்.

அப்போது பூர்சிரவஸிற்கு நாற்பத்தியேழு வயது.

இளமையின் கடைக்கூற்றில் அவர் வாழ்ந்த காலம்.

துரியோதனாதியோருடன் பாண்டவர்கள் சூதாடித் தோற்ற மறுநாள் தனது நண்பர்களுடன் அது சம்பந்தமாக தனது கருத்துக்களை விவாதித்துக் கொண்டு நின்றபோது இக்குரல் அவருக்கு கேட்டது. அக்குரலில் தெரிந்த எச்சரிக்கைத் தொனி இன்றும் அவர் மனதில் இருக்கிறது.

முதல் தடவையாக அத்தினாபுர தெருவொன்றிலே ஒலித்த அக்குரலை அத்தினாபுர மக்களின் கணிசமானோர் கவனித்ததை பூர்சிரவஸ் அவதானித்திருந்தார். அவரும் அக்குரலால் கவரப்பட்டிருந்தார்.

சரியாகப் பதின்மூன்று வருடங்களுக்குப்பின் அந்தக் குரல் மீண்டும் அத்தினாபுரத்தின் இன்னொரு தெரு மூலையிலே இரண்டாவது தடவையாக ஒலித்தது.

அது முக்கியமானதொரு காலகட்டம். பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் முடித்து வந்த பின்னர் கண்ணனைத் தூதனுப்பி தூதெல்லாம் பயனற்றுப்போய் போரே இறுதி முடிவு என்றாகி பின் கௌரவரும் பாண்டவரும் போருக்குரிய ஆயுதங்களைச் செய்து கொண்டிருந்த காலப் பகுதி அது. ஆரியவர்த்தம் முழுவதுமே போர்ச் சூழலுக்குள் அகப்பட்டு போர் வெறிகொண்டு வேறு எந்தச் சிந்தனைகளுமே இல்லாது ஒரே முகமாக போர் என்று நின்ற காலம் அது.

போர் முனைப்புகளில் ஈடுபட்டு நின்று அத்தினாபுர மக்களுக்கு அக் குரலைக் கேட்க நேரம் இருக்கவில்லை.

கேட்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. ஒரு சிலரே அக் குரலை அவதானித்து இருந்தனர்.

பதின்மூன்று வருடங்களுக்குப் பின் அக்குரலில் ஒரு முதிர்வு தெரிந்தது. நிதானம் இருந்தது.

அக்குரலுக்குரியவன் தோற்றத்திலும் ஒரு முதிர்ச்சி தெரிந்தது.

பூர்சிரவசிற்கு அப்போதும் அறுபது வயதாகிவிட்டது.

அனுபவங்கள் தந்த அறிவினால் அக் குரலின் அர்த்தங்கள் பல புலனாகியும் அவரால் அவற்றை முழுதாக அன்று ஏற்க முடியவில்லை. ஏற்காமலும் இருக்க முடியவில்லை. எனினும் போர் சிந்தனைகளினால் குரல் தந்த கருத்துக்கள் மழுங்கடிக்கப்பட்டுவிட்டன.

அப்போது அக்குரலின் தொனித்த ஒரு விமர்சனத்தன்மையினை போரின் கொடுமைபற்றி விஸ்தாரிப்புக்களை இன்றும் அவர் மறக்கவில்லை.

அன்று மக்களால் கல்லடி பட்ட அக்குரலுக்குரியவன் இறந்துவிட்டான் என்றே பூர்சிரவஸ் எண்ணியிருந்தார்.

இப்போது :

அதே குரலைப் பூர்சிரவஸ் மேலும் கேட்கிறார்.

போரினால் ஏற்பட்ட பெரும் இழப்புக்களினால் ஏற்பட்ட அனுபவங் களினால் நெகிழ்ந்த மனதோடு இப்போது அக்குரலை பூர்சிரவஸ் செவிமடுக்கின்றார்.

# 3



இப்போது குருசேத்திரப்போர் முடிந்து ஒரு மாத காலமாகிவிட்டது

. போர் ஏற்படுத்திய மனப் புண்களும் உடற் புண்களும் உலர்ந்தும் உலராத நிலையிலே தர்மனின் பட்டாபிஷேகத்திற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

போரினால் அலமந்து போன அத்தினாபுரம் மீண்டும் உயிர்பெற ஆரம்பிப்பது போல இருக்கின்றது.

அத்தினாபுர தெருக்களில் வண்டிகளும் மனிதர்களும் மீண்டும் நடமாட ஆரம்பித்து விட்டார்கள்.

எத்தனை விதமான முகங்கள்

குருசேத்திரக் களத்தில் ஈடுபடாதவர்கள் எவருமில்லை.

யாராவது ஒருவர் வெற்றி பெற்றோர் பக்கம் சார்ந்தவராக இருப்பார் அன்றி தோல்வியுற்றோர் பக்கம் நிற்பார்.

தோல்வியுற்றோர் முகமெல்லாம் சோர்ந்து கிடந்தன. வெற்றி பெற்றோரும் சோர்ந்தே இருந்தனர்.

வெற்றியோ தோல்வியோ போர் எனில் மிஞ்சுவது என்ன? இழப்பு, துயரம், சோகம் இவைதானே.

இந்தப் பின்னணியிலேதான் மூன்றாவது தடவைய்யாக அக்குரலை பூர்சிரவஸ் கேட்கிறார்.

இம்முறை அக்குரலின் தொனிக்கும் உணர்ச்சி என்ன?

பூர்சிரவஸ் முதற் குரலை ஞாபகப்படுத்தியிருக்கிறார்.

அக்குரலின் தொனித்தது விமர்சனம்.

இரண்டாவது குரலை மீட்டு மனசுக்கு கொணர்கிறார் பூர்சிரவஸ். அக்குரலில் ஒலித்தது கண்டனம்.

இப்போது ஒலிக்கும் குரலை நன்றாக அவதானிக்கிறார். இதில் ஒலிப்பது என்ன?

ஆம். இதிலொலிப்பது முழுக்க முழுக்க ஒருவகைக் கிண்டல்.

ஆம். மொத்த மனதின் கிண்டல்,

கோபம் கலந்த கிண்டல்.

மடையர்களே என்று மக்களைப் பார்த்து மட்டம் தட்டும் கிண்டல்.

அந்தக் குரலை பூர்சிரவஸ் அவதானித்திருந்தார்.

பிசிறு அல்லாத வெங்கலத்தொனி வார்த்தைகள். அளவாய், அழகாய், தெளிவாய் வருகின்றன.

சொற்களைக் குரலுக்குரியவன் ஏற்ற இறக்கங்களுடன் இடைவெளி விட்டுக் கூறுகிறான். அவன் ஹ்ருதயத்திலிருந்து அவ் வார்த்தைகள் வருவதை அவனின் உணர்ச்சி மிகுந்த குரல் காட்டுகின்றது.

அக்குரலிலே இப்போது மக்கள் கூட்டத்தின் பெரும்பான்மை தன்னை இழந்து கிடக்கின்றது. பூர்சிரவஸும் அக்குரலால் கட்டுண்டு கிடக்கிறார். அக்குரல் அங்குள்ளோர் நினைப்பதை அல்லவா கூறுகின்றது.

பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் அக்குரலுக்குரியவன் தன்னை அறிமுகம் செய்தமை பூர்சிரவசிற்கு ஞாபகம் வருகின்றது.

''பிரகஸ்பதியின் மாணவனான சார்வாகசிந்தனைப் பரம்பரையில் வந்த சார்வாகன் வந்திருக்கின்றேன். தர்மம் என்ற பெயரிலே அதர்மம் நடக்கின்றது..''

''வேத சூத்திரங்களின் துணையோடு

அதர்மம் தர்மமாக ஆதிக்கம் செலுத்துகின்றது.''

''நாலுவருண பாகுபாட்டையும் ஞாயப்படுத்துகிறது. பிராமணதர்மம். அதற்கு எதிராக நான் குரல் தருகிறேன்.''

''வேத உபநிடத விற்பனர்களே வாருங்கள்! தவளைகளைப் போல் வேதங்களை ஓயாமல் கூவிச் சத்தமிடும் மூடர்களே என்னுடன் வாதிட வாருங்கள். மக்களை ஏமாற்றி வயிறுவளர்க்கும் உங்களுடன் வாதிட வந்துள்ளேன்.''

கொய்யா மரக் கிளையினால் செய்யப்பட்ட தண்டத்தை நாட்டி அதன் முன்னாள் பத்மாசனம் போட்டு இருந்த ஓர் இளைஞன்தான் இதனைக் கூறினான்.

நீண்டநாசியும், அகன்ற பெரிய நெற்றியும், சிவந்த மேனியுமாக காட்சிதந்த அவ் இளைஞன் சாம்பல் பூசிய வெற்று மேனியுடன் பெருச்சாளித் தோலிலான கௌபீனம் அணிந்து காட்சி தந்தான். அவன் கண்களில் தெரிந்த அமானுஷ்ய ஒளி அனைவரையும் அவன்பால் ஒருவித பயம் கொள்ள வைத்திருந்தது.

அவனைச் சந்தித்த முதற் சந்திப்பும் பூர்சிரவஸிற்கு நன்கு ஞாபகம் இருக்கிறது. அவரும் சில கணப்பொழுதுகள் அவன் குரலிலும், கண்களின் ஒளியிலும் கட்டண்டு கிடந்தவர்தான்.

பதின்மூன்று வருடங்களுக்குப்பின் மீண்டும் அவனைப் பார்க்கையில் அவனது உடல் சற்றுத் தளர்ந்திருந்தது. முப்பது ஆட்டை பிராயத்தினாக அன்றிருந்த இவனுக்கு இப்போது நாற்பத்தியிரண்டு ஆட்டை இருக்கும். உடல் தளர்ந்திருப்பினும் அவன் கண்களின் பார்வை முன்னைய விட தீட்சண்யமாக இருந்தது. முகத்தின் பிரகாசம் முன்னையவிட அதிகமாக இருந்தது. தலையில் பல நரைமயிர்கள் அவன் முதுமையின் வாசலில் காலடி வைப்பதைக் கட்டியம் கூறின. ஆனால் முன்னையவிட திதானமான பேச்சு, அட்டகாசமாக, தூக்கியெறிந்த அவன் பேச்சு இப்போது இல்லை.

அவன் வாய் அசைவினையும் தடி சுழற்றும் இலாவகத்தையும், தீட்சணியமிகுந்த அவனது கண்களையும் வைத்த கண் வாங்காது பார்த்தபடி நின்றனர் மக்கள்.

பலரது முகங்களில் வியப்பு சிலரது முகங்களில் சினம்

அவன் நின்று கொண்டிருந்தான்.

அவன் தலையிலிருந்து விரிந்த சடைகள் அவன் மார்பிலும் முதுகிலும் அவன் பேச்சிலும் அங்க அசைவினதும் தாளத்திற்கேற்ப அசைந்தபடி இருந்தன.

அவன் மேல் முழுவதும் சாம்பல்.

நெற்றியிலிருந்த நீளமான செம்மை நிறக்கோடு மூன்றாவது கண்போல் தோற்றமளித்தது.

அவனது நீண்ட கௌபீனம், ஆடைகள் துறந்த பற்றற்ற மனநிலையை உணர்த்தியது.

தீட்சண்யம் மிகுந்த அவன் பார்வை அவனது அறிவிற்குச் சான்றுபகர்ந்தது.

நீண்டு வளைந்த கொய்யாத்தடியை வலது கையால் சுழற்றிச் சுழற்றி அவன் பேசினான்.

''அத்தினாபுரத்து மக்களே, குருசேத்திர யுத்த களத்திலே கணவர்களை இழந்த மனைவியரே, காதலனை இழந்த காதலிகளே, புதல்வரை இழந்த பெற்றோரே, சகோதரர்களையும் அன்புக்குரியவர்களையும் அன்புக்குரிய ஆனை குதிரைகளையும் போரிலே பறிகொடுத்த பாவிகளே! சற்று உங்கள் செவிகளை என் சொற்களுக்கு கடன் கொடுங்கள்.''

''பெரும் சூதாட்டக்காரனும் தன் மனைவியின் சம்மதம் கேட்காது அவளைச் சூதிலே பணயம் வைத்தவனும் வில்வித்தை பயிற்றிய குருவான துரோணரை கொல்ல யுத்த களத்திலே பொய் சொன்னவனும் மகா தர்மவான் என்று பிராமணர்களால் பிரசாரப்படுத்தப்பட்டவனுமான தர்மன் முடிசூடப்போகின்றான். தம்பியர் நூற்றுவரைக் கொன்று தனையர்கள் பலரைப் பலிகொடுத்து ஆயிரக்கணக்கான வீரர்களின் குருதியை கங்கை நதியோரத்தில் ஓடவிட்ட கயவன், வெட்கமில்லாது புரோகிதர்கள் யாகம் செய்ய, பூரணக் கலசங்கள் வைக்க நாளை முடிசூடப்போகின்றான்.''

''துரியோதனனுக்குரிய அத்தினாபுர நகரம் பாண்டவர்கள் கைகளுக்கு மாறிவிட்டது. அதிகாரத்தைக் கைப்பற்ற இரண்டு அதிகாரக் கும்பல்களுக்குமிடையே நடந்த யுத்தத்தில் நீங்கள் மந்தைகளாக யாரோ ஒருவர் பக்கம் நிற்கின்றீர்கள். வெறியுடன் ஒருவரை ஒருவர்

கொன்றீர்கள். வெறியடங்கியது, பாண்டவர் வென்றார்கள், மற்றவர்கள் தோற்றார்கள், மக்களும் தோற்றார்கள்;.''

''மக்களும் தோற்றார்கள்''

என்பதனை அழுத்திச் சொல்லிவிட்டு தொடர்கின்றான் சார்வாகன்.

''வெற்றிக் களிப்பிலே பாண்டவர்கள் இருக்கின்றார்கள்,''

''வெற்றியா அது? சொந்த பந்தங்களின் பிணத்தின்மேல் கட்டப்பட்ட வெற்றியோர் வெற்றியா? ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட வெற்றி மகிழ்ச்சி தருமனின் முகத்திலே, அந்த யுத்தத்தை தர்ம யுத்தம் என்று ஞாயப்படுத்தும் கிருஷ்ணனின் வாதங்கள் வேறு''

இவ்வளவும் கூறிவிட்டு சார்வாகனன் தன்முன்நின்று மக்களின் முகங்களில் அவர்களின் உணர்வுகளையும் தன்தீட்சண்ய பார்வையால் அவதானிக்கின்றான். மக்களின் முகவாட்டம் அவன் கண்களில் படுகின்றது. பேச்சைத் தொடர்கிறான்.

''உங்கள் முகத்திலே ஏன் இந்த வாட்டம்? வியாசமுனிவர் பார்வையிலே கிருஷ்ணரின் ஆசியுடன் தர்மன் முடிசூடப்போகின்றான். தர்ம இராச்சியம் அல்லவா வரப்போகின்றது. மகிழ்ச்சிகரமான புதுயுகமல்லவா தோன்றப்போகின்றது? அந்த மகிழ்ச்சியின் அடையாளத்தை உங்கள் முகங்களில் காணவில்லையே? அனைவரும் உங்கள் இழப்பின் பாரங்களை நெஞ்சில் சுமந்தபடியே நிற்கின்றீர்கள். அவர்கள் நினைவுகள் தீயாக உங்கள் ஹ்ருதயங்களை தகிக்கின்றன. இழந்த உம் புதல்வர்கள், இழந்த உம் கணவர்கள் உங்கள் கனவுகளில் வருகின்றார்கள். அவர்கள் நினைவுகள் உங்களை அழுத்துகின்றன.''

பூர்சிரவஸின் மனம் இரும்புக் குண்டாய் கனத்தது.

''ஓ சார்வாகா! என் மனதில் எழும் எண்ணங்களை எப்படி இனம் கண்டாய்? என் இழப்புக்களை எப்படி அறிந்தாய்?''

பூர்சிரவஸின் இரண்டு இளம் புதல்வர்களினதும் முகங்கள் அவர் முன் தோன்றின. அவர்கள் இருவரையும் மார்பிலும் தோளிலும் சுமந்து வளர்த்த காலங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. அவர் கண்களில் மட்டுமா கண்ணீர்? அருகில் நின்ற இன்னொரு முதியவரின் கண்களிலும் கண்ணீர். அவர் தம் குடும்பத்தில் எத்தனை பேரை இழந்தாரோ? மௌனம்

இரைச்சலாக மாறியது. தமது இழப்புக்களை அப்பெண்கள் எண்ணினரா? போரிலே பறிகொடுத்த அவர்களது புதல்வர்களதும், கணவரதும், நினைவுகள் மனதை ஆக்கிரமித்தனவா?

''ஐயோ என்ரமகனே, யுத்தகளத்தில் பலி கொடுக்கவா உன்னைப் பெற்று வளர்த்திருந்தேன்.''

என்ற ஒரு பெண்ணின் ஓங்கிய ஒப்பாரி ஒலி, அனைத்து விசும்பல் பேரிரைச்சலையும் கிழித்தபடி மேலெழுந்தது.

மக்களின் விசும்பல், பேரிரைச்சலையும், இரைச்சலையும் கிழித்து எழுந்த ஒப்பாரியையும் நிதானமாக உள்வாங்கிய சார்வாகான் தனது பேச்சைத் தொடர்ந்தான்.

''அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அதிகாரமே அடிநாதம். ஆளும் கூட்டத்தினர் அதிகாரத்தை, கையில் எடுத்துக் கொள்கிறார்கள். அறிஞர்களும், இலக்கியங்களும், மதங்களும் அதிகாரத்திற்கு; சார் பாகவேயுள்ளனர். தம் கருத்துக்களால் மக்கள் மனதிலே அதிகாரத்தை ஞாயப்படுத்தும் மனோநிலையை உருவாக்கி விடுகிறார்கள். அதிகாரம் சார்ந்த கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. உருவாக்கப்பட்ட கருத்துக் களுக்கு மக்களும் அடிமைகளாகி விடுகிறார்கள்.''

சார்வாகன் தொடர்ந்தான்.

''கௌரவரின் அதிகாரம் ஒழித்துக் கட்டப்பட்டுவிட்டது. இதோ பாண்டவரின் அதிகாரம் ஆரம்பமாகப் போகிறது. பாண்டவரின் அதர்மங் களை ஞாயப்படுத்த இனி வியாசர் வந்துவிடுவார். கிருஷ்ணன் ஒத்து ஊதுவான்.''

''பாண்டவர்கள் அதர்மர்களா என்ன உளறுகிறாய்?''

கூட்டத்திலிருந்து எழுந்தது ஒரு குரல்.

''குரலுக்குரியவரே என் முன் வாருங்கள்''
என்றான் சார்வாகன்.

ஒரு முதியவர் அவன் முன் சென்றார்.

''பாண்டவர்கள் தர்மவான்கள், கௌரவர்கள் அதர்மவான்கள் என்ற கருத்து வேதியரால் திட்டமிட்டு பரப்பப்பட்ட கருத்துக்கள் தமக்குரித்

தில்லாத நாட்டைப் போர் புரிந்து வென்ற பாண்டவரா தர்மவான்கள்?''

சார்வாகன் வினா எழுப்பினான்.

கூட்டத்தினர் மத்தியில் சிறிது சலசலப்பு எழுந்தது.

''என்ன இவன் உளறுகிறான்'' என்றனர் சிலர்.

''இவன் யாருடைய ஆளு?'' என்றனர் சிலர்

''பயித்தியக்காரன்'' என்றனர் சிலர்

''பாண்டவர்கள் பாண்டுவின் புத்திரர்களா?''

வினாக் குண்டை வீசி எறிந்துவிட்டு மக்கள் திரளிடமிருந்து பதிலை எதிர்பார்த்தபடி நின்றான் சார்வாகன்.

சனத்திடமிருந்து பதில் வரவில்லை. சார்வாகனே பதில் கூறினான்.

''அவர்கள் குந்தியின் புதல்வர்கள், பாண்டுவின் புதல்வர்களல்ல, குந்திக்கும், மாத்ரிக்கும் பிற கணவன்மார்களான இயமன், வாயு, இந்திரன், அசுவினி, தேவர்கள் மூலம் பிறந்த புத்திரர்கள் அவர்கள்.''

''பாண்டுவின் அரச இரத்தம் பாண்டவர்கள் உடலில் ஓடவில்லை எப்படி அவர்கட்கு அரசுரிமை சேரும்?''

''அரச தர்மப்படி திருதராட்டிரன் மகன் துரியோதனனுக்குத் தானே அரசுரிமை. தமக்குரித்தில்லாத நாட்டை லட்சக்கணக்கான அப்பாவி மக்களைப் பலிகொடுத்துப் பறித்தெடுத்த பாண்டவர்கள் தர்மவான்களா?''

இக்கருத்துக்களை மக்கள் ஏற்கனவே தமக்குள் பேசியிருக்கிறார்கள். சார்வாகன் அவற்றுக்கு அழகாக உருவம் தருகிறான். பகிரங்கமாக உரத்து உண்மை பேசப்படுகையில் சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

பாதையிலே முடிசூட்டு விழாவுக்காக யாகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வண்டிகள் அத்தினாபுர அரண்மனை நோக்கிச் சென்றபடி இருந்தன. புரோகிதர் கூட்டமொன்று அதன் பின்னால், சார்வாகன் அவற்றைக் கண்ணுற்றான். அவன் முகத்தில் கோபம் பொங்கியது. முகம் சினத்தால் நிரம்பியது.

''இதோ யாகம் செய்து வயிறு வளர்க்கும் புரோகிதர் கூட்டம் அரசனுக்கு கடவுளரின் ஆசியைப் பெற்றுக் கொடுக்கக் கூட்டமாகச் செல்கிறது.

மக்கள் உழைப்பிலே விளைந்த பொருட்கள் யாவும் யாகத்திற்காக வண்டி வண்டியாகச் செல்கின்றன. வென்று அடக்கிய ஒருவனின் விழாவைக் கொண்டாட, துரியோதனுக்கு புகழ்பாடிய அதே புரோகிதர் கூட்டம் செல்வதைப் பாருங்கள்.''

''யாராண்டால் என்ன? அவர்களின் பாதம் கழுவித் தம் வயிறு வளர்க்கும் இக்கூட்டத்தைப் பாருங்கள். அக்கினியை வளர்த்து ஆடுகளை அறுத்து அவியாக்கும் அறிஞர்களைப் பாருங்கள். தாம் படைக்கும் அவியைத் தேவர்கள் வந்து சாப்பிடுவார்கள் என்று கதைவிடும் கயவர்களைப் பாருங்கள். இவர்கள் கட்டிவிட்ட கதைகள் தான் நான்கு வர்ணம்.''

பேசுவதைச் சற்று நிறுத்தினான். பின் தொடர்ந்தான். அவன் குரலில் கேலி தொனித்தது.

''பிரஜாபதியின் தலையிலிருந்து தோன்றினார்களாம், பிராமணர்கள். அவரின் தோளிலிருந்து தோன்றினார்களாம் சத்திரியர்கள், அவரின் தொடையிலிருந்து தோன்றினார்களாம் வைசியர்கள். அவரின் பாதத்திலிருந்து புறப்பட்டார்களாம் சூத்திரர்கள்.''

''ஒரு பிரம்மத்திலிருந்து புறப்பட்ட இவர்களுக்குள் எத்தனை வேற்றுமைகள்.''

பிராமணர்களின் ஆசியுடன் வைசியரான வணிகரின் உதவியுடனும் அரசரான சைத்திரியர் நாட்டை ஆளுகிறார்கள். ஆட்சிபுரிய உதவிய பிராமணர்களுக்கு அரசன் தானம் வழங்குகின்றான். வைசியரின் சொத்துக்களுக்கு தன் படைபலத்தால் பாதுகாப்பு அளிக்கிறான். சூத்திரர்களின் உழைப்பில் இம் மூவரும் சுகிக்கிறார்கள். கூட்டுக் கொள்ளை, மக்களைச் சுரண்டிகொளுக்கும் இம் மூவர்க்கும் தர்ம சாஸ்திரங்களின் பாதுகாப்பு.

''வர்ண தர்மம், அதை மீறுதல் கூடாது,''

''அது தர்மம் என்ற தர்ம போதனைகள்,''

சார்வாகன் முகத்திலே பயங்கரமான வெறுப்புணர்வு, புரோகிதர் கூட்டத்தை நோக்கி சார்வாகனன் உரத்த குரலில் கூறினான்.

''பாவிகளே உங்கள் அறிவின் அதிகாரத்தை ஏன் மக்களை அடக்கப் பயன்படுத்துகிறீர்கள்? ஆயுதம் ஏந்தி உயிர்பறிக்கும் அரக்கர்களுக்கு ஏன் நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்கள்?''

புரோகிதர் கூட்டத்தில் ஒருவன் சார்வாகனனை திரும்பிப் பார்த்தான், பூர்சிரவசும் அவனை அவதானித்தான். பார்த்தவன் தேவதத்தன் என்ற பிராமணன். அவன் முகத்திலே குரோத பாவம் தெரிந்தது. அவனைப் பூர்சிரவஸ் அறிவான். துரியோதனன் அரச சபையில் புரோகிதனாக யாகம் செய்தவர்களுள் பின்னணியிலே நின்ற அவன் பாண்டவர்கள் ஆட்சிக்கு வந்ததும் பிரதான புரோகிதர்களுள் ஒருவனாகிவிட்டான்.

முதல்தடவை பிராமண தர்மத்தை சார்வாகன் விமர்சித்த போது அவனோடு வாதிட்டு தேவதத்தன் அவமானப்பட்டமை பூர்சிரவஸ் இற்கு ஞாபகம் வந்தது.

''டேய் சார்வாகா! தர்மத்திற்கு புது விளக்கம் தரும் கலகக்காரா, உன் உடம்பெல்லாம் விசமடா.''

சார்வாகனை திரும்பிப் பார்த்து தேவதத்தன் கூறினான்.

''உன்பார்வையில் என்னுடம்பில் மாத்திரம்தானடா விசம்? நீங்கள் எல்லாம் சாதாரண மக்கள் மனதில் எல்லாம் வர்ணாச்சிரம தர்மம் என்ற விசத்தை பரப்பி வைத்துள்ளீர்களே? அது தெரியாதா''

பதிலடி தந்தான் சார்வாகன்.

சார்வாகனுடன் பேச்சு கொடுத்தால் மக்கள் முன் தம்மைப் புட்டுப் புட்டு வைப்பான் என்பது தேவதத்தனுக்கு நன்கு தெரியும். பழைய அனுபவங்களை அவன் மறந்துவிடவில்லை. ஒரு மூடனின் பேச்சை காதில் வாங்காத பாவனையுடன் அவன் யாகப் பொருட்களை ஏற்றி வண்டிகளில் பின்தொடர்ந்தான். இப்போது அவன் சாதாரண புரோகிதன் அல்ல. தலைமைப் புரோகிதர்களுள் ஒருவன். அரசசபையில் கௌரவித்திற்குரிய புரோகிதன். நாளை நடக்கவிருக்கும் தர்மனின் பட்டாபிஷேக விழாவில் யாககாரியங்களில் ஒருபகுதிக்கு அவனைத்தான் பொறுப்பாக்கியிருந்தார்கள். விதுரனின் ஆலோசனையுடன்.

தர்மன் தேவதத்தனுக்கு நாளை யாகம் முடிய கனகாபிஷேகமும், பதினைந்து தட்டுக்கள் நிறைய பொற்காசுகளும் தரவுள்ளதாக தேவ தத்தன் ஏற்கனவே அறிந்துள்ளான். தன் எதிர்காலத்தையும் அதன்

பிரகாசத்தையும் மனதில் எண்ணியவாறே அரசாட்சி செய்யப் போகும் தர்மனை விமர்சனம் பண்ணும் சாம்பல் பூசிய வெற்றுடம்பினனும், கௌபீனதாரியுமான ஒன்றுக்கும் வழியில்லாத எதிர்கால இன்பங்களைத் தொலைத்துவிட்ட சார்வாகனை வெறுப்புடன் பார்த்தபடி யோசனையுடன் நடந்தான் தேவதத்தன்.

பூர்சிரவசிற்கு சார்வாகன் கூற்றில் நிறைய உண்மைகள் இருப்பது தெரிந்தது. அரண்மனையிலும், மக்கள் மத்தியிலும் இருக்கும் வாய்ப்பு பெற்ற பூர்சிரவஸ் தன் அறுபது வருட அனுபவத்தில் பல உண்மைகளை அனுபவபூர்வமாக அறிந்திருந்தார்.

அரண்மனையில் நடைபெறும் அநியாய விடயங்களை மௌன சாட்சியாக இருந்து அவர் கண்டிருக்கிறார். மக்களைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் தன் மகன்மாரின் நலன்களில் மிக அக்கறை கொண்ட திரிதராட்டினரையும், அவனுக்கு ஒத்தூதிய காந்தாரியையும் அவர் அறிவார்.

திரிதராட்டினரின் வாயிற் காவலானாக இருக்கும் சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்தபோது திரிதராட்டினரதும், காந்தாரியினதும், துரியோதனன், துட்சாதனனதும் உரையாடல்களைக் கேட்கும் சந்தர்ப் பங்கள் அவர்களுக்கு கிடைத்துள்ளன.

சார்வாகன் சொன்னதுபோல அதிகாரம் ஒன்றுதான் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. தனக்குப்பின் அதிகாரமும் அரசும் தன் மகனுக்குச் சேரவேண்டும் என்பதில் திரிதராட்டினன் மிகுந்த கவனமாக இருந்தான். அண்ணனின் மனைவியின் புதல்வர்கள் என்று சிறிது நெகிழ்வு வந்தாலும் அர்ச்சுனனும் வீமனும் தன் பிள்ளைகளை விட யுத்தகலைகளில் சிறந்த வராக இருந்தார்கள் என்பதை திருதராட்டினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

காந்தாரியிடம் திருதராட்டினன் கூறும் வார்த்தைகள் இரவுக் காவலனாக அவர்கள் அறை வாசலில் நின்ற இளைஞனாக பூர்சிரவ சிற்கும் கேட்கும்.

''காந்தாரி! யுத்தக் கலைகளிற் சிறந்தவர்களே அதிகாரத்தைக் கைப் பற்றிக் கொள்வார்கள். துரோணாச்சாரியாரிடம் பாண்டவர்களை யுத்த வித்தைகள் பெற அனுமதித்தது தவறோ என்று யோசிக்கின்றேன்.

அவர்களின் திறமை, அதிகாரத்தை என் மக்களிடமிருந்து பறித்து விடுமோ என்று அஞ்சுகிறேன்.''

ஒரு சாதாரண தந்தையாக திருதராட்டிரன் கூறியவை அன்று பூர்சிரவஸிற்குப் பெரிதாகத் தெரியவில்லை.

சார்வாகனின் விளக்கத்தில் அவ் வார்த்தைகளுக்கான முழு அர்த்தம் இப்போதான் புரிகின்றது.

''இரண்டு அதிகார வெறியர்கட்கிடையில் நடந்த பெரும்போரில் சாதாரண மனிதனான நான் என் குடும்பத்தில் ஐந்து பெரும் ஆண்களைப் பலிகொடுத்து விட்டேனா? இதனால் நான் பெற்ற நன்மை என்ன?''

பூர்சிரவஸ் சிந்தனை வயத்திலாழ்ந்தார்.

சார்வாகனின் முதல் குரல்

இரண்டாவது குரல்,

மூன்றாவது குரல்

மூன்றிலும் ஒரு தொடர்ச்சியான தர்க்கமும் பெரும் உண்மையும் புதைந்து கிடப்பது பூர்சிரவஸிக்குப் புலனாகத் தொடங்கியது.

''சார்வாகா நீ அரண்மனைக்குள் சென்றதில்லையா?''

மக்கள் கூட்டத்துள் ஒருவன் கேட்டான்.

''அரண்மனைக்குள் சென்றவர்கள் அரண்மனைத் தத்துவங்களுக்குள் மாட்டிக் கொள்வார்கள். மீளமுடியாது தத்தளிப்பார்கள். அரண்மனையின் சுகபோகங்கள் அவர்களின் சிந்தனைகளை மழுங்கடித்துவிடும்.''

சார்வாகன் பதில் கூறினான்.

கூட்டத்தில் இருவர் பேசிக் கொண்டார்கள்.

''யாகசாலையிலே இக்கோவணாண்டியை நான் கண்டேன். யாகத்திற்காக அடுக்குப் பண்ணிக் கொண்டிருந்த புரோகிதர்களைப் பார்த்து அவர்கள் யாகத்திற்காக பல நூற்றுக்கணக்கான ஆடுகளையும், குதிரைகளையும் கொல்வதைப் பரிகசித்துக் கொண்டிருந்த போது அவர்களால் இரத்தம் கொட்டக் கொட்ட அடித்துத் துரத்தப்பட்டவன் இவன்.''

யாகத்திற்காக மிருகங்கள் கொண்டு வரப்பட்டபோது நடுவீதியிலேயே அவற்றை மறித்து ''விடுங்களடா வாயில்லாச் சீவன்களை. உங்கள் அதிகாரத்திற்காக மக்களைத்தான் பலி கொடுத்தீர்கள். இப்போது வாயில்லாச் சீவன்களில் குரல்வளைகளையுமா அறுக்கப் போகின்றீர்கள்'' என்று வாதிட்டவன் இவன்.

அவனைத் தம்முடன் சேர்க்க புரோகிதர்கள் தயங்கினர்.

ஒதுக்கினர். ஒதுங்கினர்.

ஆம் அவன் மலைவாசிகளுடனும், சூதர்களுடனும் சுற்றியலைந்தான். சாதாரண மக்களைக் கனிவுடன் பார்த்தான். ஆட்டுக்குட்டிகளை ஆதரவோடு அணைத்துக் கண்ணீர் மல்கினான். சாதாரண சனங்கள் சமைத்த எளிய உணவைப் புசித்து அவர்களின் வீட்டின் வெளிமுற்றத்திலே தன் யோக தண்டத்தை ஊன்றி அதன் கீழ் சிந்தனை வயப்பட்டவனாக படுத்துக்கிடந்தான்

மக்களைக் காணும் போதெல்லாம் அவன் கண்களிலிருந்து கண்ணீர் திரளும். புரோகிதர்களையும்; அதிகார வர்க்கத்தினரையும்; காணும் போதெல்லாம் அவன் கண்கள் தீயை உமிழும்

கூட்டத்தினரின் சார்வாகன் பற்றிய விமர்சனங்கள் பூர்சிரவசுக்கு புதியதொரு சார்வாகனைக் காட்டியது. அவர் இதுநாள்வரை அரண்மனையிலும், வெளியிலும் பெற்ற அனுபவங்கள், அண்மையில் குருஷேத்திர யுத்தத்தால் அவருக்கு ஏற்பட்ட பேரிழப்பு எல்லாமே அவர் சிந்தனைகளையும் சற்று மாற்றியிருந்தன.

பதின்மூன்று வருடங்களுக்கு முன் ஒலித்த அவன் முதற் குரலை பூர்சிரவஸ் மிகுந்த கஷ்டப்பட்டுத் தன் ஞாபக வட்டத்தினுட் கொண்டு வரமுயன்றார்.

தன்னையும் தன் பாரம்பரியத்தையும் அறிமுகம் செய்து யோக தண்டத்தை ஊன்றி தன்னுடன் வாதிட வரும்படி புரோகிதருக்குச் சவால் விட்டு நின்ற இளைஞனான சார்வாகனின் முகம் அவரது ஞாபத்திற்கு வருகின்றது.

பதின்மூன்று வருடங்களுக்கு முந்திய அத்தினாபுரப் பின்னணியை நினைவுக்குக் கொண்டுவர முயல்கிறார் பூர்சிரவஸ்.

# 4



இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் பாண்டவர்கள் வனவாசம் புறப்பட்டார்கள். அதற்கும் இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அத்தினாபுர அரண்மனையிலே சூதாட்டம் நடைபெற்றது. அன்று பூர்சிரவசிக்கு அரண்மனைக் காவல் வேலை.

சகோதரர்களான கௌரவரும் பாண்டவரும் எதிரிகளாக மாறிச் சூதாடியதும் சூதிலே பாண்டவர்கள் தோற்றுத் தலை குனிந்ததும், பாஞ்சாலியை அவர்கள் பணயம் வைத்ததும், துச்சாதனன் சென்று பாஞ்சாலியை இழுத்து வந்து சபை முன் எறிந்ததும் துரியோதனன் ஆக்ஞையிட அவள் துகிலினை துச்சாதனன் உரிந்து, முடியாமல் சோர்ந்து விழுந்ததும், அரசவையிலிருந்த அறிவாளிகள் செய்வதறியாது ஒன்றும் பேசாது திகைத்து நின்றதும் பாண்டவரும், பாஞ்சாலியும் சபதம் செய்ததும் ஒப்பந்தம் ஒன்றின் பின் பாண்டவர் வெளியேறியதும் பூர்சிரவஸின் ஞாபகத்திற்கு வருகின்றன.

வாயிற் காவலனாக நின்றமையினால் அவருக்கு பலரின் குரல்கள் காதில் விழுந்திருந்தன.

சகுனியின் எக்காளமிடப்பட்ட சிரிப்பு.

அருச்சுனனின் சபதம்

எல்லாமே பூர்சிரவசிக்கு ஞாபகத்திற்கு வந்தன.

விதுரன், பீஷ்மர் ஆகிய பெரியவர்களின் அனுங்கிய குரலும் அவருக்குக் கேட்டது.

இரண்டு குழுக்களுக்கிடையில் ஒரு குழு இன்னொரு குழுவை அடக்க நினைக்கும் சண்டையாகவும், பெரியவர்கள் என்போர் முடிவெடுக்காமல் தர்ம ஞாயங்கள் பேசியதாகவுமே பூர்சிரவசுக்கு ஞாபகம்.

அந்நிலை பார்த்து பூர்சிரவஸ் தனக்குள் அதிருப்திப்பட்டுக் கொண்டார்.

''என்ன பெரியவர்கள் இவர்கள். அதிகாரப் போட்டியிலே உண்மையை பட்டவர்த்தனமாக உரைக்க முடியாது. அதிகாரத்திலிருக்கும் திருதராட்டினன் மனங்கோணாமல் தர்ம ஞாயங்களை அதற்கேற்ப விளக்கும் தர்மவான்கள்.''

சாதாரண மனிதனான அவரால் என்ன செய்ய முடியும்?

எல்லாம் முடிந்து அனைவரும் வெளியேறிய பின் அரண்மனைப் புரோகிதர்கள் அனைவரும் ஒன்று கூடிக் கதைத்தபடி நின்றனர்.

பாண்டவர் கௌரவர் ஆகிய இரு குழுவினருள் யாரோ ஒருவர் பக்கம் நின்று அவர்கள் வாதித்தனர்.

துரியோதனனை ஞாயப்படுத்தியது ஒரு புரோகிதர் குழாம். தர்மனை ஞாயப்படுத்தியது இன்னொரு புரோகிதர் குழாம். ஏதோ ஓர் அதிகார வர்க்கத்தின் பால் அவர்கள் சார்ந்திருந்தனர்.

பாண்டவர்கள் வனவாசம் புறப்பட்ட வேளையிலும் அத்தினாபுரம் முழுவதும் ஒருவகை மௌனம் நிறைந்து கிடந்தது. துரியோதனின் அதிகாரத்தை எதிர்த்துக் குரல் தர யாரும் இருக்கவில்லை. பீஷ்மரும், விதுர னும் பின்னடித்த பின்னர் வேறு யாருக்குத்தான் துணிவு வரும்?

ஒரு சோகப் பார்வையுடன் மக்கள் பாண்டவர்களை வனவாசம் அனுப்பி வைத்தனர்.

பாண்டவர்கள் வனவாசம் சென்ற மறுநாள் சார்வாகன் அத்தினா புரத்துள் பிரவேசித்தான்.

நடந்து முடிந்த விடயங்கள் அவனுக்கு எரிச்சலையூட்டியிருக்க வேண்டும். மக்களின் மௌனத்தைக் கலைக்க அவன் விரும்பினான். யோகதண்டம் ஊன்றி பத்மாசனமிட்டிருந்து தன்னுடன் வாதிட வரும்படி புரோகிதர்களை அழைக்கின்றான். அவனுடன் வாதிட வருகின்றான் தேவதத்தன். இருவரும் சம வயதினர். அறிவின் ஒளி இருவர் முகங் களிலம் பிரகாசிக்கின்றது.

தேவதத்தன் கூறுகிறான்.

''சார்வாகனே நீ உலோகாயுத வாதி, பிரமத்தையும் தேவர்களையும் நிராகரிப்பவன், ஜடத்தையே நம்புபவன், ஜடமில்லாத பொருள் எமது தேவர்கள், உனக்குப் புரியாது பிரம்மஞானம்.''

சார்வாகன் நிதானமாக அவன் கூறியதை உள்வாங்கிக் கொள்கிறான்.

''தேவர்கள் ஜடமல்ல என்றால் அவர்களின் உருவம் என்ன? வடிவமில்லாமிட்டால் அவர்களை எப்படிக் காண்பீர்கள்? அக்கினியில் அவிஸைச் சொரிந்து தேவர்கட்கு அளிக்கின்றீர்களே ஜடமல்லாத அவர்கட்கு அதை உண்ண வாயுண்டா? சமிபாடடைய வயிறுண்டா, உண்டவற்றை கழிக்க மலவாசல் சலவாசல் உண்டா?''

சார்வாகனின் பதில் கிண்டலும் கேலியுமாக தேவதத்தனைக் குத்துகிறது.

கிண்டல் தாங்க முடியாத தேவதத்தன் சற்று ஆவேசத்துடன் கூறினான்.

''பேய் மூடா! நால் வருணதர்மங்களும் பிரமமும் பொய் என்றா கூறுகிறாய்?''

''நால்வருண தர்மங்களையும் பிரமத்தையும் பொய் என்று கூறும் என்னைப் பார்த்து நீ மூடா என்றால், இல்லாத ஒன்றைப் பிரமம் என்று கற்பனா ரூபம் கொடுத்துப் பொய் கூறும் உன்னை, சமமாக வாழ்ந்த மக்களை நாலு வர்ணமாகப் பாகுபடுத்தி அதுவும் பிரமத்திலிருந்துதான் வந்தது என்று கூறி பேதாபேதங்களை உங்களது பொய்யான சாத்திரங் களால் ஞாயப்படுத்தும் உன்னை மகாமடையன் என்று நான் கூறலாம் அல்லவா?''

கிண்டலாகக் கூறிவிட்டு தேவதத்தின் ஆடை அலங்காரங்களை உற்றுநோக்கினான் சார்வாகன்.

''பிரமத்தையும், பேரின்ப ஞானத்தையும் தேடும் உனக்கு ஏனடா தேவதத்தா அரண்மனை உத்தியோகம், பட்டுப் பீதாம்பரம், பல்லக்கு பவனிகள்? வீட்டில் வேலையாட்கள், மூன்றுவேளை மூக்கு முட்டச் சாப்பாடு?''

சார்வாகனின் உதடுகள் துடித்தன.

''உலோகாயுத இன்பங்களிலே நீங்கள் திளைத்துக் கொண்டு மக்களைப் பார்த்து லோகாயுத இன்பங்களை விடுங்கள் என்ற உங்களின் இரட்டை வாழ்க்கைக்கு வேதங்களில் இடம் உண்டா?''

சார்வாகனின் வினாக்களும், விடைகளும் தேவதத்தனின் வாழ்க்கையை விமர்சனம் பண்ணுவனாக இருந்தன.

வாதத்தைக் கேட்டபடி நின்ற புரோகிதர்கள் பலர் குமுறியபடி நின்றனர். சார்வாகன் மீது அவர்களின் குரோதப்பார்வை சென்றது. ஆயினும் சார்வாகனின் வார்த்தைகளைக் கேட்ட மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினருக்கு சார்வாகன் தமக்காகப் பேசுவதாகப்பட்டது.

சார்வாகனின் எதிர்வாதங்களிலும் உண்மை தெரிந்தது.

பளபளவென்ற உடை அணிந்து, உலக இன்பங்களெல்லாம் அனுப வித்தபடி, பிரம்மம் பற்றியும், தேவர் பற்றியும் மோட்சம் பற்றியும் துறவு பற்றியும் பேசும் தேவதத்தனும் சாம்பலை மேலிற் பூசியபடி கௌபீனதாரியாக இன்பமெல்லாம் துறந்து சாதாரண மனிதனாக நின்று இவ்வுலகம் பற்றியும் மக்கள் பற்றியும், இவ்வுலக வாழ்வு பற்றியும் பேசும் சார் வாகனும் மக்களுக்குப் புதிராகத் தோன்றினர்.

உலோகாயுத இன்பங்களோடு இருப்பவன் துறவறம் பேசுவதும், துறவி போலத் தோற்றமளிப்பவன் உலோக இன்பங்கள் பற்றிப் பேசு வதும் மக்களுக்கு வியப்பளித்தது.

மக்கள் கூட்டம் சார்வாகன் கருத்துக்களுக்கு எதிரானதாயில்லை என்பதை அறிந்து கொண்ட தேவதத்தன்.

''வேத நிந்தனை புரியும் வீணனுடன் வாதிட நான் தயாரில்லை'' என்று கூறிய படியே விரைந்தான். அவனது சக புரோகிதர்கள் முகத்தில் கோபமும், ஆத்திரமும் கொப்பளிக்க அவனைப் பின்தொடர்ந்தனர்.

தேவதத்தன் போன பின்னர் அவன் போன திக்கைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்ற சார்வாகன் மக்களைப் பார்த்து பின்வருமாறு கூறினான்.

''அத்தினாபுர மக்களே! அதிகாரத்தின் ஆட்டம் தொடங்கிவிட்டது. இனி இது நிற்காது. அதிகாரத்திற்கான போரிலே குருவம்சம் இரண்டாகப் பிரிந்து விட்டது. இதோ செல்கிறானே தேவதத்தன் இவன் குருவம்சத்தின் ஒரு கிளையான கௌரவரின் அதிகாரத்தை ஞாயப்படுத்தும் புரோகிதர்களுள் ஒருவன், சத்திரியரான கௌரவர்களுக்கு இவனது வேத சிந்தனைகளும், யாகநெறிகளும் தேவைப்படுகின்றன.''

சார்வாகன் தொடர்ந்தான்

''பாண்டவர்களினதும். கௌரவர்களினதும் சொத்துக்கலெல்லாம் யார் சொத்துக்கள்? ஆயிரக்கணக்கான ஆரியவர்த்த மக்கள் உழைத்த சொத்துக்களே, தமது படைபலம், ஆட்பலம் மூலம் அவையாவையும் அரச சொத்துக்களாக்கி விட்டார்கள். உழைக்கும் மக்களின் சொத்துக்களை சூதிலேயே பணயம் வைத்து ஆடும் உரிமையை கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் தந்தது யார்?''

சார்வாகனின் குரலின் தொனி மெல்ல மெல்ல கூடிக்கொண்டு வந்தது.

''சூதாட்ட விளையாட்டும் மகிழ்ச்சியும் அரசர்களுக்குரியது. அதன் துயரமெல்லாம் மக்களுக்குரியதா? தர்மரின் பக்கத்து ஞாயங்களை விளக்க இனி கிருஷ்ணன் வந்து விடுவான், தர்ம தேவதைகள் சூதாட்டத்தில் தோற்றுவிட்டார்களென்று கதை பரப்புவான்.''

சார்வாகனின் முகத்தில் கோபம் கூடியது

''ஆரிய வர்த்தத்தில் நகரப்புற பகுதிகளிலே உள்ள மக்கள் நலிந்து போயிருக்கையில் ஆரிய வர்த்தத்தின் ஆளுகைக்குட்பட்ட மக்கள் அரைவயிறாய் இருக்கையில் கௌரவரும், பாண்டவரும் பணயம் வைத்துச் சூதாடுகிறார்கள்.''

எலிகளாம் மக்களுக்குப் பிராணன் போகிறது பூனைகளாம். குரு வம்சத்தினருக்கு சூதாட்டம் ஒரு விளையாட்டு

''சூதாடுவது அரச தர்மம். சூதிலே வைத்த பொருட்கள் யாவும் அவர்கள் சொத்து.'' கூட்டத்திலிருந்து எழுந்தத ஒரு குரல்.

குரல் வந்த திசையை நோக்கினான் சார்வாகன்.தன் தடியை அவனை நோக்கி நீட்டித் தடியால் பேசுவது போலப் பேசினான்

''தர்மம், எது தர்மம்? தன் நாட்டை, தன் மக்களை, தன் தம்பிமாரை, தன் மனைவியை பணயம் வைப்பது தர்மமா? பஞ்சமா பாதகங்களுள் ஒன்று சூது. பாதகச் செயலை அரசர் புரியலாமா? சூதிலே வைத்த பொருட்களெல்லாம் மக்கள் இதுகால வரை உழைத்த சொத்து. தர்மனுக்கும் துரியோதனனுக்கும் அவற்றை வைத்து சூதாட என்ன உரிமை இருக் கிறது?''

சார்வாகன் தொடர்ந்தான்.

''அரசர் விட்ட பிழைகளைச் சரியென நியாயம் கற்பிக்கும் ஜனங்களே! உங்கள் அழிவுக்கான விதையை குருகுலம் நாட்டிவிட்டது. ஐவரும் சபதம் செய்து விட்டு சென்றுள்ளனர்.''

''சகுனியின் வினைத்திறனால் துரியோதனன் வென்றுவிட்டான். அவன் வெற்றியைக் கொண்டாட நாளை யாகம் நடக்கப் போகிறது. சத்திரிய தர்மத்தை நிறுத்தும் புரோகிதக் கும்பல் நாளை ஆடுவெட்டி அவிசொரிந்து யாகம் செய்யப் போகின்றார்கள். அந்த யாகத்தில் துரியோதனன் கும்பலின் துஷ்டத்தைனமெல்லாம் மறைக்கப்பட்டுவிடும்.''

பாண்டவர்கள் சும்மா இரார். கண்ணன் குருகுலத்தைப் பழி வாங்குவான். பாண்டவரை காய்களாகப் பயன்படுத்துவான். பலரின் நலன்கள் இதிலே சம்பந்தப்பட்டு விட்டன மக்களே!

கறுப்பும் வெள்ளையுமாகத் தான் பிரச்சினைகளை நீங்கள் காண்கின்றீர்கள். அதிகாரத்திற்கான போட்டிகள் உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

தன் தங்கை ஏமாற்றப்பட்டதாக குரு குலத்தின் மீது கோபம் கொண்டிருக்கின்றான். காந்தார மன்னன் சகுனி, தனது யாதவ குலத்தின் மேன்மை குருகுலத்தின் பலகீனத்தில்தான் உள்ளது என்பதை அறிந்து

வைத்துள்ளான் யாதவக் குலக் கிருஷ்ணன். குருகுலத்தின் அழிவிற்காக வித்துக்களைச் சகுனியும் கிருஷ்ணனும் இட்டு விட்டனர். ஆடை தந்து அபயம் அளித்தவன் என்ற பெயரில் கிருஷ்ணன் பாண்டவர்களின் மனங்களை வென்று விட்டான். இனி என்ன சகுனி இயக்க கௌரவர் தம் ஆதிக்கத்திற்காக இயங்குவர். கண்ணன் இயக்க பாண்டவர் தம் அதிகாரத்திற்காக இயங்குவர். இரண்டு குழுவினரும் நடத்தும் போரில் அறிஞரும் புலவரும் முனிவர்களும் இரண்டாகப் பிரிவர். இருபாலாரையும் ஞாயப்படுத்தும் கருத்துக்கள் பரப்பப்படும். சூதர்கள் அவற்றைப் பாடிய படி ஆரியவர்த்தம் எங்கும் திரிவர்.

''ஆரிய வர்த்த மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மறைந்துவிடும். அம்மக்கள் இரு பிரிவினராகப் பிரிவர். ஒப்பந்தங்கள் மீறப்படும். யுத்தம் வரும். அதிகாரத்தின் இறுதி வடிவம், அதுதான் யுத்தம்! ஆம் பெரும் யுத்தம்.''

நீண்ட பேச்சினை நிறுத்தி அமைதியாக சார்வாகன் தூரநோக்கில் எதையோ பார்த்தபடி வெறித்து நின்றான்.

தூரத்தில் பார்வையை பதித்தபடி தொடர்ந்தான்.

''பதின்மூன்று வருடங்களுக்கு பின்னால் வரவிருக்கும் பாரதப் போர் எனக்கு இப்போதே தெரிகிறது. யுத்தத்திற்கான விதையை நட்டுவிட்டால் பின் அது வளர்ந்த மரமாகத் தானே வேண்டும். உண்மையை உணருங்கள் மக்களே. யுத்தம் வராமல் தடுக்க ஆவன செய்யுங்கள். சத்திரிய தர்மத்தை கட்டிக்காக்கும் பிராமணப் புரோகிதர்களின் வார்த்தைகளுக்கு இடம் கொடாதீர்கள்.

யுத்தத்தின் விஷ விதைகளை கண்டறிந்து எடுத்தெறியுங்கள். விழித்தெழுங்கள். இப்போது விழிக்கா விட்டால் யுத்தம் உங்கள் அனைவரையும் விழுங்கிவிடும்.''

சார்வாகன் நீண்ட பேச்சினைப் பேசியபடியே நின்றான். காலைமுதல் நண்பகல் வரை அவன் பேசினான். அவன் பேச்சை யாரும் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை.

யுத்தமாவது வருவதாவது என்ற அலட்சியத் தோரணையிலேயே அனைவரும் சார்வாகனை வேடிக்கை பார்த்தபடி சென்றனர்.

அவன் தோற்றமும், கூற்றுக்களும் சிலருக்கு நகைப்பை உண்டு பண்ணின. பூர்சிரவஸுக்கு அவன் குரலில் ஒரு ஞாயப்பாடு தெரிந்தது. அரசவையில் துரியோதனனின் இரத்தம் தடவித்தான் தலைமுடிப்பேன். அதுவரை முடியேன் என்று ஆவேசத்துடன் தலையை விரித்து விட்ட பாஞ்சாலியின் கோப விழிகளோடு கூடிய ஒலியும் வீமனது சபத கர்ஜனைகளும் பூர்சிரவஸின் காதுகளில் வீழ்ந்தமையினால் அவமானப் படுத்தப்பட்ட பாண்டவர்கள் சும்மா இரார் என்பது பூர்சிரவஸுக்கு புரிந்துவிட்டது.

ஒப்பந்தப்படி பன்னிரு வருட வனவாசமும் ஒரு வருட அஞ்ஞாத வாசமும் முடித்து வந்தால் பாதி நாடுகிடைக்கும் என்ற சபைப் பெரியோரின் கூற்றுக்களை பூர்சிரவஸ் நம்பினார். பெரியவர்கள் போர் நடக்க விட்டமாட்டார்கள் என்பது பூர்சிரவஸ் நம்பிக்கை.

எனினும் பாஞ்சாலியினதும் வீமன், அருச்சுனனதும் கோப விழிகள் அவருக்கு எதையோ கூறின. அவர் அந்தராத்மா போர் வருமோ என்ற சந்தேகத்தை இயம்பிக் கொண்டிருந்தது. போர் வருவதாயினும் இன்னும் பதின்மூன்று வருடங்களின் பின்தானே. அதற்கிடையில் எத்தனையோ நடைபெற்றுவிடும் என்ற ஆறுதலில் பூர்சிரவஸ் சார்வாகனின் குரலை அவ்வளவு பெரிதாக அன்று எடுக்கவில்லை.

''போர் வரும். கவனம் மக்களே. போர்களைத் தவிர்க்க முடிவுகளை மேற்கொள்ளுங்கள்''

என்ற சார்வாகனின் ஆரம்ப எச்சரிக்கைக் குரலையும் அத்தினாபுர மக்களைப் போல பூர்சிரவஸும் அவ்வளவு பெரிதாக எடுக்கவில்லை.

மக்கள் தன் கருத்துகளை எடுக்காவிடினும் போர்வரும் எனவும் அதற்கான வித்துக்கள் ஊன்றப்பட்டு விட்டன என்றும் அதைத் தடுக்க முயற்சிகளை மக்களே மேற்கொள்ளுங்கள் என்றும் ஆரிய வர்த்தம் முழுதும் அலைந்து அலைந்து சார்வாகன் மக்களுக்குக் கூறிவந்ததாக பூர்சிரவஸ் நண்பர்கள் மூலம் அறிந்தார். சில நாட்களில் பூர்சிரவஸ் சார்வாகனை மறந்தும் விட்டார்.

# 5



பூர்சிரவஸ் அருகில் நின்ற ஒருவர் உரையாடுவருது பூர்சிரவஸின் காதில் விழுந்தது.

அவர்கள் பக்கம் பூர்சிரவ தன் பார்வையைத் திருப்பினார்.

இருவரும் முதிய வயதினர்,பிரகாசமான முகத்தினர்.அறிவின் தீட்சண்ய ஒளிஅவர்கள் இருவர்களின் விழிகளிலும் தெரிந்தன.

ஒருவர் சஞ்சயர்

மற்றவர் வைஜம்பாயனர்.

''வேதநெறிகளை எடுத்தெறிந்து பேசி புரோகிதர்களின் அதிகாரபக்கச் சார்பை அழுத்திக் கூறும் இவ்வறிஞன் யார் வைஜம்பாயனரோ?''

சார்வாகனனின் கருத்துக்களால் கவரப்பட்டு நின்ற வைஜம்பாயனருக்கு சஞ்சயர் சார்வாகனனின் வேதநெறி எதிர்க்கருத்துக்களைக் கேட்டபின்னரும் அவனை அறிஞன் என அழைத்தமை வியப்பைத் தந்தது.

சஞ்சயரைத் திரும்பிப் பார்த்தார் வைஜம்பாயனர்.

'அறிஞன் தான் அவன் சஞ்சயரே சந்தேகமில்லை. அவன் கருத்துக் களுக்கும் தர்க்கத்திற்கும் ஓர் அறிவுப் பாரம்பரியம் உண்டு. சார்வாக மதத்தினன் அவன். மோட்சம், மறு உலகம் என்பதும், தேவர்கள் தேவ

உலகம் என்பதும் கற்பனை, நிஜ உலகே உண்மை. அதிலுள்ள வாழ்வே உண்மை இறப்பு நிஜம். வாழ்வே இருப்பு என்று கூறும் சார்வாகமத்தின் வாரிசு அவன். ரிசி பிரகஸ்பதியின் பாரம்பரியம். இவர்களின் தத்துவங் களிலே கூறப்படுவது என்னவென்றால்....''

வைஜம்பாயனார் முடிக்கு முன்னரேயே.

''பிரகஸ்பதி அசுரர்களின் குரு என்றல்லவா கதைகள் கூறுகின்றன. அப்படியாயின் சார்வாக மதம் அசுரமதமா?''

ஆச்சரியம் முகத்தில் ததும்ப சஞ்சயர் கேட்டார்.

தன் தோளிலுள்ள உத்திரியத்தை எடுத்து மறு தோளில் போட்டபடி:

''அசுரர் தேவர் என்பதெல்லாம் பின்னாளில் கட்டப்பட்ட கதைகள் தானே.

அசுரர்கள் இந்நாட்டில் வாழ்ந்த குடிகள்.

தேவர்கள் வந்தேறு குடிகள்,

வாழ்ந்தோருக்கும், வந்தோருக்கும் நடந்த கதைகளையும் யுத்தங் களையும் தான் தேவ அசுர கதைகளாகவும் யுத்தங்களாகவும் கட்டி விட்டார்கள் நமது புரோகிதர்கள். கதை கட்டிய புரோகிதர் மீது சார்வாக மதத்தினருக்குச் சரியான கோபம்''

என்று பதிலளித்த வைஜாம்பாயனர் மீண்டும் தன் உத்தரீயத்தை மறுதோளுக்கு மாற்றியபடி தொடர்ந்தார்.

''வைதீக மதம் நால்வர்ணப் பாகுபாட்டை ஏற்படுத்தி விட்டது. அதைக் கட்டிக்காக்க கதைகள் மூலம் ஒரு கருத்துருவைத் தோற்று வித்துள்ளது.

அது அதிகாரத்திற்கு துணை போகின்றது. யாகங்கள் மூலம் அரச ரைக் கவர்ந்துவிட்டது. அது போரை ஊக்குவிக்கின்றது. போரில் வெற்றிபெறும் அரசர்கட்கு ஊக்கம் தருகின்றது. செய்த பாவங்களை எல்லாம் யாகங்கள் மூலம் கழுவி விட முனைகிறது. இதனால் அது மக்கள் நலனுக்கு எதிரானது என்று கூறும் சார்வாக மதம் மக்களையே மையமாகக் கொண்டது. சார்வாகனனின் கருத்துக்களை கூர்ந்து கவனியுங்கள். அவன் மக்கள், மக்கள் என்றே பேசுகிறான். மன்னர் களுக்கு எதிராகக் கதைக்கிறான். அவன் கதைகளில் தெரிவது என்ன

ஆளும் கும்பல் ஆளப்படும் கும்பல் என்ற பிரிவுதானே. அவன் கருத்துக்கள் யாவும் ஆளும் கும்பலுக்கு எதிரான கருத்துக்கள்.''

''அப்படியானால் ஆளும் கும்பல் இவன் கருத்துக்களை அனுமதிக்குமா? அதிகாரம் மிகுந்தவர் இவனை உயிரோடு விட்டு வைப்பார்களா? நீங்கள் கூறும் கருத்துக்கள் யாவும் எனக்கு புதியனவாக்கப்படுகின்றன. 'வைஜம்பாயனரே சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்.'

சஞ்சயர் விளக்கம் கேட்கத் தயாரானார்.

''சர்வாகன் சொல்வதில் நிறைய உண்மைகள் உள்ளன. பிரச்சினைகளை யதார்த்த ரூபத்தில் காண்கிறான் சார்வாகன். பலநூறு வருடங்களுக்கு முன்னரே ஆரிய வர்த்தம் முழுவதும் கண அரசுகளே இருந்து வந்தன.''

விஸ்திரமாகக் கூற ஆரம்பித்தார் வைஜாம்பாயனர்.

கண அரசுகள் என்பது இரத்த உருத்துள்ள மக்களின் கூட்டம்.

அவர்கள் மத்தியிலேயே வர்ணங்கள் இருந்தன. வர்ண பேதங்கள் இருக்கவில்லை. அனைவரும் சேர்ந்து உழைத்தனர். உழைப்பில் கிடைத்த பயனை அனைவரும் பங்கிட்டுக் கொண்டனர். பேதாபேதங்கள் இல்லாது கிடைத்ததை அனைவரும் பகுத்து இயற்கையோடு வாழ்ந்த காலம் அது. அரசுகள் தோன்றாத காலம். தாய்வழியிலேதான் கணம் அறியப்பட்டது. அதிதி, திதி, தன, ஸார்த்யை எனப் பதினெட்டுக் கணங்கள் இருந்ததாகவும் அதிலிருந்து தான் ஆதித்தியர்கள், தைத்திரியர்கள், தானவர்கள், சாத்தியர்கள் முதலான நாமறிந்த கணக் கோத்திரங்கள் தோன்றின என்றும் என் பாட்டனார் கூறியிருக்கிறார்.

''ஆனால் நாமறிந்த கணங்களிடையே வர்ணப்பாகுபாடுகள் இருக்கின்றனவே. கணத்துள் ஒருவரிடம் பெரும் செல்வமும் இன்னொருவரிடம் வறுமையும் நிறைந்திருக்கிறதே. கணங்களுள் சண்டைகளும் நடக்கின்றனவே.''

சந்தேகம் எழுப்பினார் சஞ்சயர்.

''பழைய கண வாழ்க்கையிலே ஜனநாயகம் நிலவியது. இரத்த உருத்துடையோர் சண்டை போடுவது பெரும் பாவம் எனக் கருதப்பட்டது. ஆனால் பெரும் சொத்துச் சேகரிப்பும், சேகரித்த சொத்துக்களை

குடும்பங்கள் தமக்குள் சேமித்து வைத்த செயலும் கணங்களுக்குள் சண்டைகள் தோன்றக் காலாகிவிட்டன. உள்ளோர் இல்லார் என்ற பிரிவு கணத்துக்கள் மெல்ல மெல்ல ஏற்படலாயிற்று. ஏற்கனவே இருந்த வர்ணப்பிரிவுக்கு இப்போது புது அர்த்தம் தரப்பட்டது. சத்திரியரும், பிராமணரும் உயர்ந்தோர், சொத்துடையோர்,

வைசியரும், சூத்திரரும் தாழ்ந்தோர், சொத்தில்லாதோர்,

கண அங்கத்தவர்கள் பலர் பணக்காரர் ஆயினர். பணக்காரர் மேற்குடியினராயினர். மேற்குடியினர் மேலும் மேலும் போர் புரிந்து சொத்துக்களையும் நிலங்களையும், அடிமைகளையும் சேகரித்தனர். அதிலிருந்துதான் சஞ்சயரே அரசுகள் தோன்றின.''

வியப்பாக இருக்கிறது. எல்லாவற்றையும் தலைகீழாகச் சொல்கிறீர்கள்

''இல்லை சஞ்சயரே நீங்கள் தலைகீழாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள். இல்லை, இல்லை. அப்படிக் கருத்துக்களை புரோகிதக் கும்பல் கட்டி வைத்திருக்கிறது.

மதராவில் கம்சனும் மகதத்தில் ஜராசந்தனும் பெரும் இராச்சியத்தை அமைக்க விரும்பினார்கள். அஸ்தினாபுரத்தில் கௌரவர்கள் பெரும் இராச்சியத்தை அமைக்க விரும்பினார்கள்.

பெரும் இராட்சியம் அமைக்க விரும்பினால் என்ன செய்ய வேண்டும் சஞ்சயரே பெரும் போர் நடத்தத்தானே வேண்டும்.''

''தம் மக்கள் நலனுக்கான ஒரு பெரும் இராச்சியம் அமைக்க எண்ணியதில் என்ன தவறுண்டு வைஜம்பாயினரே?''

சனஜயரைப் பார்த்து வாய் விட்டுச் சிரித்தார் வைஜம்பாயனர்

''தம் மக்களுக்காகவா இராச்சியம் அமைத்தார்கள்?

இல்லை சஞ்சயரே, தமக்காகத்

தம் பிற்சந்ததிகளுக்காக,

என்ன நடந்தது துரியோதனன் அரண்மனையில் சஞ்சயரே?

ஜனநாயகத்தின் காவலர்களாகக் கருதப்பட்ட பீஷ்மர், கிருபர் போன்ற மூத்தோர்களே கொலைகாரர்களாகி விட்டார்களே ஏன்?

அவர்கள் செல்வமும், நிலமும், அடிமையும் உடையவர்கள்,

அச்சுகபோக வாழ்வை இழந்துவிட அவர்கள் விரும்பவில்லை.''

துரோணரைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் அவரிடம் பெரும் செல்வ மில்லையே

''சொத்துப் பெருக்கத்தில் கெட்டிக்காரர்கள் கூட பொம்மைகளாகி விடுவார்கள் என்பதற்குச் சிறந்த உதாரணம் துரோணர். போர்க்கலையில் மிக வல்லவரான துரோணர் வறுமையின் பிடியிலே வாடினார். அவர் மகன் அசுவதாமனுக்குக் கொடுக்க கூட அவரிடம் பால் வாங்கப்பணம் இருக்கவில்லை, அடிமைச் சொந்தக்காரனனான பீஷ்மருக்கு அவர் தன் வித்தைகளையெல்லாம் விற்ற கதைதான் சஞ்சயரே துரோணர் கௌரவ பாண்டவருக்கு வில்வித்தை பழக்கிய கதை.

குருவம்சத்தினர் அடிமைகளின் சொந்தக்காரர்கள்.

கௌரவரின் அத்தினாபுரத்திலும் பாண்டவரின் இந்திரப் பிரஸ்தத் திலும் இருந்த அடிமைகளின் தொகை அதிகம்.

ஏனைய சிறு சிறு கணங்களை அடக்கித்தான் இவர்கள் அடிமை களாக்கினார்கள்

அருச்சுனன் காண்ட வனத்தை அழித்து வேடர்களையும், நாகர்களையும் அடிமையாக்கியது உமக்குத் தெரியும் தானே சஞ்சயரே

அடிமைகள் ஆயுதம் ஏந்தக் கூடாது என்பதற்காக வேடர் குலத்தினரான ஏகலைவன் விரலைக் கூட மிக நல்லவரான துரோணர் தம் எஜமான விஸ்வாசத்தைக் காட்ட குரு தட்சணையாக வாங்கிய கதை அத்தினாபுர மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஆரிய வர்த்தம் முழுவதும் சுற்றிப் பல தரப்பட்ட மக்களோடும் பழகிவரும் எனக்குத் தெரியும் சஞ்சயரே.''

வைஜம்பாயனரின் கருத்துக்களால் சஞ்சயர் குழம்பிப் போனார்.

வைஜம்பாயனார் வைசியராமையினால் அவர் வாணிப நிமித்தம் பல ஊர்களுக்கும் செல்பவர் என்பதும், வைசியரை வர்ணத்தில் மூன்றாம் இடத்தில் வைத்தமையினால் அவர் பிராமண தர்மம் மீது சற்று விமர் சனப் பார்வையுடயவர் என்பதும் பூர்சிரவஸுக்கும் தெரியும்.

வைஜம்பாயனரின் கருத்துக்களுக்கு மதிப்பு அதிகம் உண்டு.

ஆனால் அவர் பகிரங்கமாக [illegible]

ஆளும் அரசரையும் புரோகிதக் கும்பலையும் பகைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை.

ஆனால் தன் மனதில் ஓடிய கருத்துக்களை துணிவாக மரண பயமின்றி எடுத்துச் சொன்ன சார்வாகனின் கருத்துக்களை ஊன்றிக் கவனித்தார்.

அவன் மீது அவர் பெரு விருப்பமும் கொண்டார்.

அவன் துணிவு அவருக்கு அவன் மீது வியப்பு கலந்த மரியாதையை ஏற்படுத்தியிருந்தது.

இரு பெரியவர்களின் உரையாடல்களையும் கவனித்ததில் சார் வாகனின் பேச்சின் தொடர்ச்சியை நழுவவிட்ட பூர்சிரவஸ் மீண்டும் சார்வாகன் பேச்சில் கவனத்தை திருப்பினார்.

சார்வாஹன் பேசிகொண்டேயிருந்தான்

''சிந்தியுங்கள் மக்களே! இப்போதாவது சிந்தியுங்கள் உங்களைப் பற்றிச் சிந்தியுங்கள்''

என்ற சார்வாகனது குரல் பூர்சிரவஸ் காதுகளில் விழுந்தன.

இவன் மக்களைப் பற்றித் தான் இன்றும் பேசுகிறான்.

இரண்டாவது முறையும் இதே குரலில் இதே அத்தினாபுரத்தில் ஓர் ஓரத்திலே நின்று மக்களே சிந்தியுங்கள் என்று தான் கூறினான்.

அக் காலகட்டமும் காட்சியும் பூர்சிவஸின் கண்முன் படமென விரிந்தன.

# 6



விராட நாட்டிலிருந்து பாண்டவர்கள் அஞ்ஞானவாசம் முடித்து வெளிவந்து விட்டார்கள் என்ற கதை மக்களுக்கு தெரிய வந்துவிட்டது.

ஒப்பந்தப்படி அவர்கள் அனைத்தையும் செய்து விட்டமையால் பாதி நாடு அவர்கட்கு கிடைத்துவிடும் என்றுதான் மக்களில் மிகப் பெரும் பாலானோர் நம்பியிருந்தனர்.

ஆனால் சூதாட்டத்தின் போது போருக்காக இடப்பட்ட விதை பின்னர் மெல்ல மெல்ல வளர்ந்து வந்ததைப் பலர் கவனிக்கத் தவறிவிட்டார்கள்.

அஞ்ஞாதவாசம் முடிந்த பின்னர் பாண்டவர்கள் மத்தியில் நடந்த உரையாடல்கள் அவர்களிற் சிலரின் எண்ணங்கள் போரினை மையம் கொண்டே இருந்தமைக்கு சான்றுகளாகும்.

துரியோதனனின் சபையிலே பாண்டவர் செய்த சபதங்களை முடிக்க போர் நடைபெற்றே ஆக வேண்டியிருந்தது.

வாழ்நாள் பூராவும் கையினால் தண்ணீர் அள்ளிக் குடியாமல் இருக்க வீமன் விரும்பவில்லை.

அவிழ்ந்த கூந்தலோடு இறக்கும் வரை வாழ்ந்து

விட திரௌபதி விரும்பவில்லை.

கர்ணனைக் கொல்லாமல் வீணே வாழ்வதை அருச்சுனன் ஒப்ப வில்லை.

செய்த சபதங்களும் மனதில் இருந்த வன்மமும் வாழ்நாளிற் பெரும்பகுதியை வனத்திலேயே கழித்து விட்டமையும் அவர்களை மேலும் மேலும் கோபம் கொள்ள வைத்தன.

இத்தனைக்கும் மேலால் துரியோதனின் ஆளுகையின் கீழ் ஒரு அரசாக இருக்க அவர்கள் விரும்பவில்லை.

துரியோதனன் கும்பல் மீண்டும் மீண்டும் தொல்லை தரும்.

பாண்டவரின் அழிவு ஒன்றையே தமது குறிக்கோளாகக் கொண்டி ருக்கும்.

துரியோதனாதியோருடன் சகவாழ்வு வாழ்வதென்பது வெறும் போலித்தனம் என்பதை பாண்டவர் நன்கு புரிந்து வைத்திருந்தனர்.

தருமனின் மனதிலே சமாதானத்திற்கான எண்ணங்கள் இடைக்கிடை தோன்றுமாயினும் தம்பிமாரின் கோபத்திற்கும், சபதங்களுக்கும் முன்னால் அதுவும் மங்கி மறைந்து விடும்.

பாஞ்சாலி போரில் மிக உறுதியாக இருந்தாள்.

தருமர் தவிர்ந்த மற்றைய தன் கணவன்மாரைத்

தயார்படுத்தி வைத்திருந்தாள்.

தனக்கு அவையில் இழைக்கப்பட்ட அவமானங்களுக்கு தம் கணவர் கள் பழி தீர்க்க வேண்டும் என்பது அவளது பிடிவாதமாக இருந்தது.

கண்ணனும் பாஞ்சாலியும் ஒரு நாள் சந்தித்த போது

பாஞ்சாலியிடம் கண்ணன் கேட்டான்.

''பாஞ்சாலி என்னால் உனக்கு என்ன ஆக வேண்டும் வேண்டியவை களைக் கேள்!''

பாஞ்சாலி சொன்னாள்.

''கண்ணா பாரதப்போர் நடக்க வேண்டும். துரியோதனன் அழிய வேண்டும் அவன் உதிரம் தலை தடவி என் கூந்தல் முடிக்க வேண்டும்.''

கண்ணன் பதில் கூறினான்.

''பாரதப்போர் நடக்கும்''

உன் கணவன்மார் நடத்தாவிடினும் நான் நடத்துவேன். உன் கூந்தல் முடியப்படும்.

கிருஷ்ணன் தூது போக முன்னமேயே நடந்த நிகழ்வுகள் இவை.

கிருஷ்ணன் உலகோர் கண்ணுக்குத் தூதுவனாக நடந்து கொள்ள வில்லை.

துரியோதனனிடம் தூது சென்ற கண்ணன் துரியோதனன் அரண மனையிற் தங்கவில்லை. விதுரனின் வீட்டிலே வேண்டுமென்று தங்கினான்.

இந்த அவமதிப்பின் மூலம் துரியோதனன் கோபத்தை சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னரேயே கிளறிவிட்டான்.

விதுரன் மீது துரியோதனன் வெறுப்படையவும் வைத்தான்.

ஒரு கல்லிலே இரண்டு மாங்காய்கள்.

துரியோதனன் அவையிலே கிருஷ்ணன் வைத்த வாதங்கள் கௌரவரைச் சாந்தப்படுத்துமாப் போல இருக்கவில்லை.

பாண்டவர்கள் ஒழுக்கமும் நேர்மையும் உடையவர்கள்.

இந்த அரசவையிலே தமக்க இழைக்கப்பட்ட அநீதிகளை அவர்கள் இன்னும் மறக்கவில்லை. கோபம் அவர்கள் நெஞ்சைவிட்டு இன்னும் ஆறவில்லை.

பதின்மூன்று வருடம் வனத்திலும், பிற நாட்டிலும் தம் இளமைக் காலங்களை அவமே கழித்துவிட்ட ஆத்திரமும் இன்னும் போகவில்லை.

அண்ணன் தர்மனின் சொல்லுக்கு அங்கே தம்பிமார் கட்டுப்படு கிறார்கள்.

அவர்கள் வளர்ந்த இடம் அப்படி.

அங்கு தலையிருக்க வால் ஆடுவதில்லை

பண்டவர்கள் இன்னும் பொறுமை காக்கிறார்கள்

பாண்டவர்கள் பொறுமைசாலிகள் பெரும் வீரர்கள்

சமாதானம் தான் அவர்களின் நோக்கு

நாடு கிடைக்காவிட்டால் போர் புரிந்தேனும் நாட்டைப் பெறுவார்கள்.

போர் நடக்குமெனில் தோல்வி உங்களுக்கு நிச்சயம்

அருச்சுனனையும், வீமனையும் வெல்வது உங்களுக்கு மகா சிரம மாயிருக்கும்.

சாமார்த்தியமாகத் தன் வாதங்களை கௌரவரைக் கோபப்படுத்துமாப் போல கிருஷ்ணன் வைத்தான்.

கிருஷ்ணனின் கேலியும், கிண்டலும் குத்தலும் நிறைந்த வார்த்தைகள் துரியோதனாதியோரை மேலும் கோபத்திற்குள்ளாக்கின.

கிருஷ்ணனின் நோக்கமும் அவர்கள் கோபமுற்று போருக்கு ஆயத்தமாக வேண்டும் என்பது தான்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சமாதானத்தை நோக்கி திருப்பாமல் போரை நோக்கி திருப்பினான் கிருஷ்ணன்.

கிருஷ்ணனின் வாதத்திறமைகள், திட்டமிட்ட வார்த்தைகள் யாவும் துரியோதனனைக் கோபத்தின் உச்சத்திற்கு கொண்டு சென்றன.

துரியோதனன் இறுதியாகவும் அறுதியாகவும் கூறினான்.

ஒப்பந்தப்படி எதுவுமே செய்ய முடியாது. என் இருக்கும் இடம் தானும் பாண்டவருக்குத் தரமாட்டேன். எமக்குரிய நாட்டை பாண்ட வருடன் பங்கிட்டுக் கொள்ள எமக்கு இஷ்டமில்லை போர் நடக்கட்டும். நாடு யாருக்குரியது என்பதைப் போர் தீர்மானிக்கட்டும். வீமனும் அர்ச்சுனனும் அங்கிருந்தால் கர்ணனும் துச்சாதனனும் இங்கிருக்கிறார்கள்.

கண்ணன் நல்லவன் போல முகத்தை வைத்துக் கொண்டு சாந்தமாகக் கேட்டான்

போர்தான் முடிவா? போரில் நீங்கள் அழிவது உறுதி. அதை நிச்சயப்படுத்திக் கொண்டீர்களா?

எரிந்து கொண்டிருந்த துரியோதனன் மனதில் கிருஷ்ண வார்த்தைகள் எண்ணையாக ஊற்றப்பட்டன.

அழிவு எமக்கல்ல. பாண்டவர்களுக்கும், உனக்கும்

என்ற துரியோதனன் சகுனியைப் வஞ்சமாகப் பார்த்தான்.

சகுனியின் ஏற்பாட்டின் படி கிருஷ்ணன் அமைந்திருந்த சிம்மாசனம் அதன் கீழ் அமைக்கப்பட்டிருந்த குழிக்குள் சென்றது. அதனுள் தன்னைக் கொல்ல அமர்த்தப்பட்டிருந்தோரைச் சம்ஹாரம் செய்தபடி அட்டகாசமாக துரியோதனன் அவையினின்று புறப்பட்டான் கிருஷ்ணன்.

கூறுவது கண்ணனடா கூறுவது கண்ணனடா கூறு கூறாக வீழ்வீர் என்ற சப்தமிட்டபடி கண்ணன் விதுரன் துணையாக வர சபா மண்டபத்தை விட்டு வெளியில் வந்தான்.

சபாமண்டபத்திற்கு இருவரும் ஒன்றாகத் தான் காலையில் பிரவேசித்தார்கள். விதுரன் வீட்டில் கிருஷ்ணன் தங்கிய செய்தி அன்றே அத்தினாபுர அரண்மனையிற் பரவி விட்டிருந்தது. கிருஷ்ணனும், விதுரனும் ஒன்றாக வருவதைக் கண்டதும் அன்று காலை சபா மண்டபத்தில் துரியோதனன் மிகுந்த ஆத்திரப்பட்டு கொண்டிருந்தான். இப்போது விதுரன் கிருஷ்ணனுக்குத் துணையாக வெளியேறுவதைக் கண்டதும் துரியோதனனால் பொறுக்க முடியவில்லை.

சாப்பிடுவது கௌரவரிடம், சகாயம் புரிவது பாண்டவர்க்கு, வெட்கம் கெட்ட விதுரா! போ! எதிரிகளுடன் போ! என்று சத்தமிட்டான், துரியோதனன்.

அவன் சப்தத்தைப் பொருட்படுத்தாது கிருஷ்ணனுடன் சபா மண்டபம் வாசல் வரை துணை வந்தான் விதுரன்.

துரியோதனன் கோபத்தை மேலும் தூண்டி விதுரனையும், துரியோதனையும், பிரிக்கும் திட்டம் ராஜதந்திரியான கிருஷ்ணன் மனதிலே தோன்றியது. மனதிற்குள் புன்னகைத்தவாறே தான் கையில் அணிந்திருந்த மோதிரத்தை தரையில் நழுவ விட்டான் கிருஷ்ணன். கைநழுவிச் சபாமண்டப வாசலில் தரையில் விழுந்த மோதிரத்தை குனிந்து எடுத்து கிருஷ்ணனிடம் கொடுத்தான் விதுரன்.

சடாரென விதுரனுக்கு கிருஷ்ணன் வானத்து சூரியனைக் காட்டி

பார் சூரியன் பரிதி வட்டம் போட்டிருக்கிறது. நாட்டிலே பயங்கரங்கள் நிகழப்போகின்றன என்றான்.

ஆமாம் என்று துயருடன் தலையசைத்தான் விதுரன்.

மோதிரத்தை வாங்கிக் கொண்ட கிருஷ்ணன்;

நீங்கள் சபா மண்;டபம் செல்லுங்கள் விதுரரே

என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

கிருஷ்ணனை வணங்கிவிட்டு விதூரன் சபாமண்டபத்திற்குள் தன் இருக்கையை நோக்கி நடந்தான்.

சபையில் அமைதி. எல்லார் கண்களும் விதுரனில் மொய்த்துக் கிடந்தன. சகுனியின் மூளை மள மளவென்ற வேலை செய்தது. துரி யோதனன் அருகில் தான் சகுனி இருந்து கொண்டிருந்தான். மற்றவர்க்குக் கேட்காமல் துரியோதனிடம் சகுனி கூறினான்.

துரியோதனா வான் பூமி தொட்டு பாண்டவர் பக்கம் தான் நிற்கப் போவதாக விதுரன் கிருஷ்ணனிடம் சத்தியம் செய்து விட்டு வருகிறான் என்று நினைக்கின்றேன் என்ன மனுஷன் இவன். சாப்பிடுவது உன் உப்பை உதவி செய்வது உன் எதிரிகட்கு

தன் ஆசனத்தில் விதுரன் இருக்கு முன்னரையே துரியோதனின் வாயிலிருந்து வெடித்தன வார்த்தைகள்.

விதுரா! எங்களிடம் வயிறும், பாண்டவர்களிடம் மனமுமா? ஏன் மீண்டும் வருகிறாய்? கிருஷ்ணனுடனையே சென்றிருக்கலாமே ஏன் வருகிறாய்! போ, போ!கிருஷ்ணனுடன் போ!''

உன் உதிரத்தில் முழுமையாக எமது கௌரவ இரத்தம் ஓடவில்லை தானே

கடைசி வார்த்தைகளை துரியோதனன் சற்று அழுத்திக் கூறி கேலியாகச் சிரித்தான்

விதுரனின் பிறப்பை இழுத்துத் துரியோதனன் பேசியமை விதுரனின் கோபத்தை உச்சத்திற்குக் கொண்டு சென்றது.

அவன் சிரிப்பு விதுரனின் கோபத் தீய்க்கு மேலும் எண்ணை

வார்த்தது.

துரியோதனா! அதிகாரத்தின் உச்சத்திலிருந்து கொண்டு என்னைப் புண்படுத்துகிறாய் உன் அதிகாரத்திற்குப் பணிந்து போக என் மனம் மறுக்கிறது. போரிலே நான் பங்கெடுக்க மாட்டேன். அதற்கு அடை யாளமாக என் வில்லை இதோ முறித்தெறிகின்றேன்.

உடல் நடுங்க மஹா ஆத்திரத்துடன் தன் பெருவில்லை முறித்து எறிந்தான் விதுரன்.

துரியோதனா அருச்சுனனின் காண்டீபத்திற்கு நிகரான தனு விதுரனின் தனு அது. இதுவரை உன் பக்கம் இருந்தது. அதை இழந்து விட்டாயே

கிருபாச்சாரியார் கூற்று துரியோதனனைச் சிறிது அசைத்ததாயினும், விதுரனை விடப் பெரிய வில்லாளியும் பரசுராமனின் சீடனுமான கர்ணன் என் பக்கம் இருக்கிறான்.

என்று கூறிவிட்டுக் கர்ணனனைப் பார்த்தான் துரியோதனன்.

கர்ணனின் புன்னகை துரியோதனனுக்கு ஆறுதல் தந்தது.

போர் நடப்பதை உறுதியாக்கிய கிருஷ்ணன் போரை நடத்தி, பாண டவர் பக்கம் வெற்றியை கொணர்வதற்கான இராஜதந்திர முயற்சியாக இதனைச் செய்தான் என்பதைச் சபையிலுள்ள சிலர் அறியாமலும் இல்லை.

அறிந்தும் மௌனிகளாய் இருந்தனர்.

பாண்டவர்கள் மாத்திரமல்ல கௌரவர்களும் சமாதானத்திற்கு விருப்பமாயிருக்கில்லை. அத்தினா புரத்தை பங்கு போட்டுக் கொண்டு பாண்டவர்களுடன் தானும் ஆட்சி புரிவதை துரியோதனன் விரும்ப வில்லை. இந்திரப்பிரஸத்தினை உருவாக்கி, பெரும் செல்வத்துடன், அடிமைக் கூட்டங்களுடனும் பாண்டவர் இருந்தமை ஏற்கனவே துரியோதனன் மனதில் பொறாமைத் தீயை வளர்த்திருந்தது. தனது அரசு விரிவாக்கல் திட்டத்திற்கு பாண்டவர் தடை என்பதை துரியோதனன் எப்போதோ உணர்ந்துவிட்டான். சுயநலத்தின் அத்திவாரத்தில் அரசு களை, உருவாக்குகையில் சகோதர பாசங்கள் எல்லாம் துச்சமாகி விடுகின்றன.

சூதாடி அவர்களைக் காட்டுக்கு அனுப்பியமை பாண்டவர்களை ஒழிக்க துரியோதனன் தீட்டிய முதல் திட்டம்.

கானகத்தில் அவர்கள் இருக்கும்போதே ஐவரையும் கொல்வதற்கான கடும் முயற்சிகளில் துரியோதனன் ஈடுபட்டிருந்தான்.

விராட நாட்டில் பாண்டவர் அஞ்ஞாத வாசம் புரிகின்றனர் என்பதை ஒற்றர் மூலம் அறிந்த துரியோதனன், அந்த நாட்டின் மீது படையெடுத்தான்.

பகை வைரம் பாய்ந்திருந்தது

வீமன், அருச்சுனன், பாஞ்சாலி கண்ணன் போல கௌரவர் பக்கத்திலும் துச்சாதனன், கர்ணன், சகுனி, ஆகியோரும் சமாதானத்தை [illegible]ம்பவில்லை.

சகுனியிடம் துரியோதனன் அடிக்கடி கேட்பான்.

மாமா பாண்டவர்கள் மீண்டும் வருவார்களா? ஒப்பந்தப்படி எல்லாம் முடித்து மீண்டால் அவர்களுக்குப் பாதி நாடு தரவேண்டி வருமே

சகுனி அட்டகாசமாக சிரித்தபடி சொல்வான்.

சமாதானம் வராது போர் தான் நடக்கும். பாண்டவர்க்கு ஆட்சி கிடைக்காது. கிடைக்கக்கூடாது

துரியோதனனுக்கு ஏற்ற தாய்மாமன்.

கிருஷ்ணன் சமாதானத் தூது வருகின்றான் என்பதைக் கேள்வியுற்று துரியோதனனும் சகுனியும் சற்றுக் கலங்கி விட்டனர்.

சபையில் உள்ள பெரியோர்களும், கிருஷ்ணனும் சேர்ந்து சமாதானத்தைக் கொண்டு வந்து விடுவார்களோ என்று.

கிருஷ்ணனைக் கொல்ல வழிவகுப்போம் அவனுக்கு அமைக்கப் படும் ஆசனத்தின் கீழ் குழி உண்டாக்குவோம். குழிக்குள் கிருஷ்ணனை வீழ்த்துவோம் ஒன்றில் கிருஷ்ணன் அழிவான். அல்லது கோபப்பட்டு போர்தான் என்ற முடிவுக்கு வருவான். இரண்டாலும் நடக்கப்போவது ஒன்று தான் சமாதானப் பேச்சுக்கள் முறிவு.

அதன் விளைவு போர்

சகுனியின் மதிநுட்பத்தை துரியோதனன் வியந்து மகிழ்ந்தான்.

உகை ஒப்புக்காகத் தான் தூது, பேச்சு வார்த்தைகள்,

தர்மஞாயங்கள் எல்லாம் என்பது இரு சாராருக்கும் தெரியும். கௌவரவர் பாண்டவர் இரு சாரார் மத்தியிலும் அடி மனதில் இருந்தது வெஞ்சினம், பகை, போருணர்ச்சி தான். ஒருவர் அழிவிலே தான் மற்றவர் வாழ முடியும் என்பதே அவர்கள் எண்ணமாக இருந்தது.

கண வாழ்க்கையைத் தாண்டி அரசுகள் உருவாகிக் கொண்டிருந்த அக்காலகட்டத்தில் அரசு உருவாக்கத்திற்கு தடையாக இருந்த அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டன.

போர் மூலமாகத்தான் அரசுகள் உருவாக வேண்டியிருந்தது. சொத்துக் குவிப்பும், செல்வச் சேகரிப்பும், இரத்த உறவுகளை துச்சமாக்கி விட்டன.

இரு சராரும் போர்தான் என்ற முடிவினை எப்போதோ எடுத்து விட்டர்கள். மக்கள் என்ன செய்ய முடியும்? மக்கள் வரலாற்றின் கைதி களாகி விட்டார்கள். அரசுக்கும் சொத்துக்கும் போர் நடத்தும் கும்பல்களில் யாரோ ஒருவர் பக்கம் நிற்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு விட்டார்கள்.

எனினும் அப்பாவி மக்கள் தர்ம ஞாயங்களை நம்பியிருந்தனர்.

ஒப்பந்தப்படி பாண்டவர் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடித்து வருவார்கள்.

துரியோதனன் சபையிலுள்ள தர்மவான்களான முதியோரும், அறிஞரும் போர் நடக்க விடமாட்டார்கள்.

ஒப்பந்தப்படி பாதி இராச்சியத்தை பாண்டவர்க்கு கொடுத்து விடுவார்கள்.

பாரதப்போர் நடைபெறாது.

தர்மன் செய்த சிறுபிழைக்காகப் பாண்டவர் பன்னிரண்டு வருடம் காட்டிலே பல துன்பங்களையும் பாண்டவர் அனுபவித்து விட்டார்கள். நாடு பெற்றதன் பின் அனைவரும் சமாதானமாக வாழ்வார்கள்

இப்படித்தான் மக்கள் நினைத்தார்கள்.

மக்கள் எப்போதுதான் போரை விரும்பினார்கள்?

அவர்கள் விரும்பியதெல்லாம் நிம்மதியான வாழ்வு. அமைதியான வாழ்வு, மகிழ்சிகரமான வாழ்வு, பிரச்சினைகள் இல்லாத வாழ்வு

ஆனால் வரலாற்றின் சூத்திரக் கயிறுகள் அதிகாரமுடையோரின்

கைகளில் இருக்கும்போது சாதாரண மனிதர்கள் என்ன

செய்ய முடியும்?

நடந்தேறிய முடிவுகள் அவர்களையும் போருக்குள் இழுக்கப் போகின்றது என்பதையும், அதனால் தாம் பெரும் இழப்புக்களைச் சந்திக்கப் போகின்றார்கள் என்பதையும் அந்த அப்பாவி மக்கள் நினைத் திருக்கவில்லை.

கிருஷ்ணன் தூது தோல்வியில் முடிந்தமை கண்டு மக்கள் திகைப் படைந்து விட்டார்கள்.

போர் என்பது முடிவாகி விட்டது

# 7



தொடர்ந்து வந்த செய்திகள் மக்களுக்கு மேலும் மேலும் திகைப்புக் களை உண்டு பண்ணின.

போருக்குரிய இடம் தெரிந்தாகி விட்டது.

அத்தினாபுரி நகரின் மேற்கு தொலைவிலுள் பெருவெளி

சமந்தபஞ்சகம் - குருசேத்திரம் தான் போர்க்களம்.

போருக்கான ஆயத்தங்களுக்காக இருபாலாருக்கும் மூன்று திங்கள் அவகாசம். இன்னும் நூறு நாட்களுக்குள் இருசாராரும் போருக்கு ஆயத்தமாகி விட வேண்டும்.

குருசேத்திரத்தை சூழவுள்ள பத்து கிராமத்திலும் இருந்த மக்களை உடனடியாக வெளியேறி விடும்படி அரசு உத்தரவிட்டது.

போரின் முதல் பலியான மக்கள் மூட்டை முடிச்சுக்களுடன் கிராமங்களை விட்டு வெளியேறினர்.

தினம் தோறும் பட்டி, தொட்டிகள், நாற்சந்திகள், கிராமங்கள், நகரங்கள், தோறும் காலையிலிருந்து நடு இரவுவரை யுத்தத்திற்காக ஆயத்தமாகும்படியும் போர்ப்பயிற்சிகளுக்கு வரும்படியும் அரச உத்தரவுகளும் போர் சம்பந்தமான பிரச்சாரங்களும் முடிக்கிவிடப் பட்டிருந்தன.

போரை எப்போதும் மனதில் இருத்தும் போர் முரசம் அடிக்கடி ஒலித்தபடி இருந்தது.

அரண்மனை சூதர்கள் துரியோதனன் புகழையும் போரில் அனைவரும் ஈடுபட வேண்டும் எனவும் பாடித் திரிந்தனர்.

மெல்ல மெல்ல மக்களும் போர்ச் சூழலில் இழுபடலாயினர்.

ஆரிய வர்க்கம் முழுவதிலுமுள்ள பிரதேசங்களுடனும் கௌரவரும் பாண்டவரும் தொடர்பு கொண்டனர். பிற பிரதேசங்களில் இருந்து படைகள் அத்தினாபுரத்தை நோக்கி வர ஆரம்பித்துவிட்டன.

விவசாய வேலைகள் யாவும் வெகு வேகமாக முடிக்கப்பட்டன. விவசாயிகள் பலர் இரு தரப்பிலும் கலந்து கொண்டு போர்ப்பயிற்சிகள் பெற ஆரம்பித்துவிட்டனர்.

சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

எனினும் வீட்டுக்கொருவராயினும் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டமையினால் ஒவ்வொரு வீட்டிலும் போர் பற்றிய கதை தினமும் நடந்தது.

காலையிலிருந்து இரவுவரை தெருக்களை கடந்து செல்லும் பிற நாட்டிலிருந்து வந்துகொண்டிருக்கும் காலாற்படையினரையும் குதிரைப் படையினரையும் வேடிக்கை பார்த்தனர் சிறுவர்கள். அவை எழுப்பிச் சென்ற புழுதிகள், சிறுவர்கள் உடலில் படிந்தன.

வேறு வேறு பாசைகள் பேசியபடி சென்ற படை வீரர்களை வேடிக்கை பார்த்தபடி நின்றுகொண்டிருந்தனர் சிறுவர்கள்.

ஐம்பத்தி மூன்று நாட்கள் ஆகியது படைகள் யுத்த களத்தின் அருகே வந்து சேர்வதற்கு:

பீஸ்மர், விதுரர் ஆகியோர் யுத்த விதிகளை வகுத்தனர்.

இன்னாருடன் இன்னார்தான் யுத்தம் செய்ய வேண்டும்.

இரவில் யுத்தமில்லை.

முதலில் வாயால் சண்டை

பிறகுதான் ஆயுதப் பிரயோகம்

ஆயுதமில்லாதோர் மீது ஆயுதம் பாவிக்க கூடாது.

குதிரைப் படை குதிரைப்படையோடுதான் மோத வேண்டும்.

சாரதிகளை காயப்படுத்தக் கூடாது.

படைகள் இலக்கமின்றி மோதக்கூடாது.

அவர்கள் வியூகங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நால்வகை வியூகங்களை மானுஷ, தெய்வ, கந்தர்வ, அசுரவியூகங்களுள் ஒன்றை வடிவமாகக் கொள்ளலாம்.

குருசேத்திர யுத்த களத்தின் பத்துக் கிராமங்களில்

தர்மன் படைகள் தங்கும்.

பத்துக் கிராமங்களில் துரியோதனன் படைகள் தங்கும்.

போர் உணர்வுகள் ஆரம்பத்தில் மெல்ல மெல்ல மக்களைப் பற்ற ஆரம்பித்தன.

தினமும் காலை முதல் மாலை வரை போர் பற்றிய செய்திகளைப் பேசிப் பேசி ஏனைய எவற்றையுமே மனதில் எடுக்காதவர்களாக மக்கள் மாறினர். போர் உணர்வுகள் மெல்ல மெல்ல போர் வெறியாக மாறத் தொடங்கியது.

கண்ணுக்குத் தெரியாத யாரோ ஒருவனைக் கொல்லும் மிருக உணர்ச்சி மக்கள் மனங்களில் பிரவகிக்க ஆரம்பித்தது. அனைவரும் ஒருமுகமாக போர் போர் போர் என்றே நின்றனர்.

சமாதானக் குரல்கள் மெல்ல ஒலித்து அனுங்கி ஒலித்து அதைப்பற்றி பேசுவோர் சமூகத்தின் புறநடைகள் என்றாகி விட்டது.

வரப்போகும் மாபெரும் அழிவுக்காக எதிர்க் குரல் கொடுக்க யாரும் முன்வரவில்லை.

சமாதானம், போர் எதிர்ப்பு மனதில் இருந்ததாயினும் அதை வெளிப் படுத்தி மக்கள் எதிர்ப்பையும் அரசு எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொள்ள யாருக்கும் துணிவு வரவில்லை.

மௌன சாட்சிகளாக அவர்கள் மனம் கனக்க ஒன்றில் போர் முயற்சி களில் ஈடுபட்டனர், அல்லது ஒளித்து வாழ்ந்தனர். சிலர் நாட்டை விட்டு வெளியேறியும் இருந்தனர்.

பூர்சிரவஸின் மகன்மார் இருவரும், மருமகன்மார் மூவரும் போர் பயிற்சிக்குச் சென்றார்கள். மருமகன்கள் மூவரும் காலாட்படையிலும் மகன் ஒருவன் குதிரைப்படையிலும், இன்னொரு மகன் யானைப் படையிலும் இணைக்கப்பட்டிருந்தான்.

பூர்சிரவஸ் வயது காரணமாக படையில் இணைய முடியவில்லை. சமையற்காரர்களுள் ஒருவரானார்.

அவருக்கான அழைப்பு இன்னும் ஒரு திங்களுள் வர உள்ளதாக அரண்மனை நிருவாகம் அறிவித்து இருந்தது.

உணவுக்கான ஆடுகளும், கோழிகளும், மதுவும் பெருவாரியாக திரட்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அரண்மனையிற் பேசிக் கொண்டார்கள்.

அன்று அரண்மனை விட்டு நடக்கவிருக்கும் போர் பற்றியும், தன் பங்கு பற்றியும் எண்ணியவாறு அந்தி மாலையில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார், பூர்சிரவஸ் அப்போது தான் அக்குரலை மீண்டும் கேட்டான்.

இப்போது அக் குரலை இரண்டாவது தடவையாகக் கேட்கின்றார், பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் கேட்ட எச்சரிக்கைக் குரல்.

தெருவின் ஓரத்தில் கௌபீனதாரியாக சடைகள் நெஞ்சிலும் மார்பிலும் புரள தன் கொய்யாத் தடியிலான யோக தண்டத்தை சுழற்றிய படி நின்ற அதே மனிதன், இளமையின் அந்திமக் காலத்தை அறிவிக்கும் நரை மயிர்களுடன், ஆனால் உறுதியான குரலிலே மக்களை நோக்கி பேசிக் கொண்டிருந்தான்.

அவனைச் சூழ மக்கள் கூட்டம் நின்று கொண்டிருந்தது.

போர் வந்து விட்டது மக்களே! நீங்கள் விரும்பாத போர் வந்தே விட்டது

போர் உங்கள் மீது திணிக்கப்பட்டு விட்டது.

பதின்மூன்று வருடங்களுக்கு முன் உங்களை எச்சரித்தேன், போருக்கான வித்து நடப்பட்டுவிட்டது எனறு.

வித்து செடியாகி மரமாகி இப்போது விருட்சமாகி விட்டது.

பயங்கரமான வெகுசனப் படுகொலை ஒன்று குருசேத்திர யுத்த களத்திலே நடக்கப் போகிறது. மக்கள் சுயவிருப்பின்றி போருக்குள்ளே இரு பக்கத்தாராலும் இழுக்கப்படுகின்றார்கள்.

யோசியுங்கள் மக்களே! யோசியுங்கள்.

நடக்கும் போர் ஆயத்தங்களை அறிவீரா? கௌரவர்கள் பதினொரு அக்றோணி சேனைகளையும், பாண்டவர்கள் ஏழு அக்றோணி சேனைகளையும் திரட்டி விட்டார்கள்.

லட்சக்கணக்கான மக்கள் போர் புரியப் போகிறார்கள்.

இறக்கவிருக்கும் அவர்கள் உண்பதற்காக இலட்சக்கணக்கான ஆடுகளும், கோழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாமே கொல்லப்படப் போகின்றன.

போருக்காகச் சேர்க்கப்பட்ட உணவுகள் மலையென குவிக்கப் படுகின்றன.

போர் வெறியூட்ட பறைகளும் சங்குகளும் மலையென இன்னோர் புறம் குவிக்கப்படுகின்றன.

மது, குடம் குடமாக சேகரிக்கப்படுகின்றது.

போர் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுவிட்டன. நெறிமுறைகள் அறிவீரா?

போர் முனையில் அரசனை சாதாரண வீரன் எதிர்கொள்ளக் கூடாது. பிறப்பால் தாழ்ந்தவர் எவரும் உயர் பிறப்பாளன் மீது அஸ்திரம் ஏவுதல் கூடாது. யுத்த சமயத்தில் உயர்ந்த மந்திரங்களை தாழ்வான எவனும் உச்சரிக்கக் கூடாது.

யுத்த விதிகளை பீஸ்மரும், கிருபரும், விதுரரும், கிருஸ்ணனும் வகுத்தார்களாம்.

அழியப் போவதோ உயிர், அதற்குள்ளும் வர்ணாச்சிரம பேதம்.

இறப்பிலும் பேதம் பார்க்கும் புரோகிதக் கும்பலுக்கு நல்ல வேட்டை.

ஏன் போரிடுகிறோம் என்று தெரியாமல் யாருடன் போரிடப் போகிறோம் என்று அறியாமல் இருபக்கத்திலுமுள்ள பொதுமக்களும் மோதிக் கொள்ளப் போகிறார்கள்.

தர்மன் முடிகூட அல்லது துரியோதனன் தன் முடியை தலைநின்று இறக்காமல் இருக்கத் தம் உயிர்களை எல்லாம் தர முன்வந்து விட்டார்கள் மக்கள். அறிஞர்களும், பெரியவர்களும் அதற்குத் திட்டமிடுகிறார்கள், யுத்த விதிகளை வகுக்கிறார்கள். அவர்கள் அதற்குத் தரும் அழகான பெயர்.

யுத்த தர்மம்

சார்வாகன் பேச்சுக்களை இம்முறை அதிகமானோர் ஆர்வமின்றியே அவதானித்தனர். கடந்த இரண்டரைத் திங்களாக யுத்தம் யுத்தம் என்று பேசி யுத்தச் சுவைக்குள்ளே மூழ்கிக் கிடந்தவர்கட்கு சார்வாகன் குரலும், கருத்தும் வேறு சுவையைத் தந்தன.

ஓரிருவர் தான் உன்னிப்பாகக் கவனித்தனர்.

தாம் சொல்லப் பயந்ததை இவன் கூறுகிறானே என்ற வியப்பும், மதிப்பும் அவர்களின் முகங்களில் தெரிந்தன.

சார்வாகன் எவரையும் பொருட்படுத்தாது உரத்த குரலிற் பேசிக் கொண்டே இருந்தான். தம் மனதிலுள்ள அனைத்தையும் மக்கள் முன்கொட்டி விட வேண்டும் என்ற தீவிரம் அவனிடம் காணப்பட்டது.

அரச சூழ்ச்சிகளை எல்லாம் உங்களுக்கு அறியும் வாய்ப்பில்லை, பாண்டவர்களைப் பாதுகாக்கும் கிருஷ்ணனின் இராஜதந்திரங்கள் ஆரம்பமாகி விட்டனவாம். கதைகள் கசியத் தொடங்கியுள்ளன. இரக்கம், அன்பு, நேயம் போன்ற மனித குலம் கண்டெடுத்துள்ள அனைத்தும் இராஜதந்திரம் என்கிற பலிபீடத்தில் பலியிடப் போகின்றன. அடிமை களையும், பெரும் சொத்துக்களையும் மேலும் மேலும் தமக்குள் வைத்துக் கொள்ள ஒரு குலத்தில் தோன்றிய இரு பிரிவுகள் தமக்குள் மோதிக் கொள்ளப் போகின்றன.

அத்தினாபுரப் பேரரசு உருவாக்கும் திட்டத்தில் பழைய கண அரசுகள் எல்லாம் இணைந்து விட்டன.

வரமறுத்தால் பேரரசு கோபித்து விடும் என்ற பயம்.

வந்தால் கிடைக்கும் லாபத்தில் பங்காவது கிடைக்கும் என்ற அற்ப ஆசை அல்லது பெரும் போரிலே பெரிய அரசுகள் அழிந்து விடும்.

மீண்டும் நலம் தந்த பழைய நாட்களுக்கு திருப்பி விடலாம் என்று கண அரசுகளின் நடக்க முடியாத ஆசையில் தான் அவை இப்போரில் இணைந்துள்ளன.

பாவம்! அவர்கள்! காலத்தின் ஓட்டத்தை அறியாதவர்கள்.

இந்தப் போரோடு அந்தக் கால அரசுகளும் முற்றாக அழிந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

அழியப் போகிறதெல்லாம் அழியப் போகிறது. மனித சங்காரம் நடக்கப் போகிறது.

யாருக்காகவோ மக்கள் தம் உயிரைத் தரத் தயாராகி விட்டார்கள்.

சார்வாகனின் குரலை எதிர்த்துக் கொண்டு எழுந்தது இன்னுமொரு குரல்.

அழியப் பொவது மக்களல்ல துறவியே!

குரல் எழுப்பியவன் ஒரு இளைஞன்.

விருபகக்ஷன்.

போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருபவன்,

பூர்சிரவஸக்கு அவனைத் தெரியும், அவன் தந்தையும் துரியோதனின் அரண்மனையிலே தான் களஞ்சிய அறையில் வேலை பார்த்தார்.

அழியப்போவது அநியாயம்

நிதானமாகக் கூறியவாறு தொடர்ந்தான் இளைஞன். வாரிசு உரிமைக்குப் பாண்டவர்கள் உரியவர்கள் அல்ல, அவர்கள் பாண்டுவின் புத்திரர்களும் அல்ல, அநியாயமாகச் சண்டையிட்டு என் அரசன் துரியோ தனனுக்குரிய நாட்டைப் பிடிக்கப் பார்க்கிறார்கள். எம் நாட்டின் ஒரு பிடி நிலத்தைத் தானும் நாம் பாண்டவர் பெற அனுமதியோம். போரில் அநியாயமாக பாண்டவர் அழிவர், அழியப் போவதோ அநியாயம் தான்!

விருபகக்ஷனுக்கு ஆதரவாக குரல்கள் பல எழுந்தன.

கூட்டத்தின் கோபம் சார்வாகன் மீது திரும்பியது.

துரியோதனன் மன்னனுக்கும் அவர் நடத்தும் நியாயமான போருக்கும் எதிராக பேசும் துரோகி இவன்

இந்த சாம்பலாண்டியை கலையுங்கள்

அவனை அடியுங்கள்

இவனைக் கொல்லுங்கள்

கருத்துக்களைப் பரப்ப அவனை விடாதீர்கள்

கோஷங்கள் கிளம்பின.

சார்வாகனின் உரைகளைக் கேட்டுக் கொண்டு நின்ற மக்கள் பலர் முகத்தில் ஒருவித வெறுப்பின் அறிகுறி.

எங்கிருந்தோ வந்த ஒரு கல் சார்வாகனின் நெற்றியைத் தாக்கியது.

தலையைப் பொத்தியபடி சாய்ந்தான் சார்வாகன்.

அவன் தலையில் இருந்து கசிந்த இரத்தம் அவன் விரல் இடுக்குகளினூடாக வெளிப்பட்டது.

சாம்பல் பூசிய உடலில் இரத்தத் துளிகள், இதை எதிர்பார்த்தவன் போல் சார்வாகன் கூறினான்.

மூடர்களே! உங்கள் உடலில் போர் வெறி தாண்டவமாடுகிறது. போர் வெறியின் அறிகுறிதானடா அந்தக் கல்வீச்சு, வேல் எறிந்து பழகும் கைகளுக்கு கல் எறிவது இலகு தானே!

எம் மன்னனுக்காக உயிர் விட வந்த என்னை மூடா என்றா சொல்கிறாய் குரல் கெட்ட கையோடு இன்னொரு கல் சார்வாகன் மீது வீழ்ந்தது. தொடர்ந்து பல கற்கள் அவன் மீது வீழ்ந்தன. இரத்தம் சொட்டக் கீழே வீழ்ந்தான் சார்வாகன்.

யாரும் இவனுக்கு உதவக் கூடாது உதவுவோர் இராஜதுரோகிகளாகக் கருதப்பட்டு தண்டனைக்குள்ளாவார்கள்

போருக்கு எதிராகக் குரல் தருவோருக்கு இவன் உடல் ஒரு பாடமாய் ஆகட்டும். இப்படியே இவன் கிடந்து சாகட்டும். மக்கள் அவனைப் பார்க்கட்டும்

எச்சரிக்கைத் தொனியில் கூறியவாறு விரூபக்ஷன் சென்றான்.

சூழ்ந்து நின்றவர்கள் மெல்ல மெல்ல கலையத் தொடங்கினர்.

பூர்சிவஸுக்கு சார்வாகனை அப்படியே விட்டுச் செல்ல மனமில்லை. சார்வாகன் கூற்றுக்களில் காணப்பட்ட ஞாயங்கள் சில அவருக்கு

உடன்பாடாய் இருந்தன. எனினும் தான் சார்வாகனுக்கு உதவினால் தான் இராஜதுரோகியாக கணிக்கப்படுவதுடன் தனக்குப் போரில் கிடைக்க விருக்கும் பரிசாரகன் பதவியும் போய்விடுமோ என்று பயந்தார்.

கல்லடி பட்டு இரத்தம் கசிய மயங்கிக் கிடந்த சார்வாகனையும் அவனுக்கு அருகில் கிடந்த அவன் யோக தண்டத்தையும் பார்த்தபடி நின்றார்.

போரை எதிர்த்துப் பேசினால் இரத்தம் சொட்டச் செய்வார்களா?

சமாதானக் குரலுக்கும் உண்மைப் பேச்சுக்கும் பரிசு கல்லெறியா

தான் மட்டும் தனியாக நிற்பதையும் தன்னைத் தூரத்தில் இருந்து சிலர் அவதானிப்பதையும் உணர்ந்த பூர்சிவரஸ் துக்கம் தோய்ந்த உளத் தோடும் இருண்ட மனத்தோடும் தன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

# 8



பதினெட்டு நாட்கள் போர் நடந்தது.

அதிகாலையிலே இரு தரத்துப் படைக் கூடாரங்களில் ஓசைகள் கேட்கத் தொடங்கிவிடும். படைக்கல ஓசை, குதிரை, தேர், யானைகளின் ஓசை, சூரியோதயத்துக்கு முன்னரேயே இருதரத்துப் படைகளும் யுத்த கோலம் பூண்டு விடுவார்கள்.

சூரியன் கிழக்குத் திசையில் உதயமானதும் குருசேத்திர யுத்த களத்திற்கு இருதரத்து சேனாதிபதிகளும் தம் அன்றைய யுத்த வீரர்கள் சூழ வந்து விடுவார்கள்

சேனாதிபதிகளின் சங்கு முழக்கங்களைத் தொடர்ந்து யுத்த பேரிகைகள் வெறி ஊட்டும்படி அதிரும், திட்டமிட்டபடி ஒவ்வொரு பகுதியினரும் தனியாகப் பிரிவர்.

தமக்குரிய எதிரிகளைத் தேடி யுத்த கோஷமிட்டபடி ஆக்கி ரோஷத்துடன் சமர்க்களத்தில் இறங்குவர்.

பகல் முழுதும் யுத்த கோஷங்களும், யானை, குதிரைகளின் கனைப்பும், பிளிறல்களும் தேர்களின் ஓசையும் மனிதரின் அலறலும் கேட்டபடி இருக்கும்.

மேற்குத் திசையில் சூரியன் மறையும் போது சேனாதிபதிகளின் சங்குகள் ஒலிக்கும். படையினர் சண்டையை நிறுத்தி தம் பாடி வீடு களுக்குத் திரும்புவர்.

மிகுந்த துயரத்தோடும், சோர்வோடும் இரத்தக்கறை படிந்த ஆயுதங்களையும் கனத்த மனதையும் சுமந்தபடி பாடி வீடுகளுக்குத் திரும்புவர்.

அவர்களோடு யுத்தகள உதவியாளர்கள்

தட்டிகளைச் சுமந்தபடி வருவர்.

தட்டிகளிலேயே காயம்பட்ட வீரர்கள்,

கையிழந்தோர்,

காலிழந்தோர்,

கண்ணிழந்தோர்,

வாளால் வெட்டுண்டோர்,

அம்புதைத்தோர்,

யானையால் துவைக்கபட்டு எலும்பு நொறுங்கியோர்

எனப்பலர்

உயிருக்குப் போராடியபடி

அலறிக் கொண்டும்

அனுங்கிக் கொண்டும் கிடப்பார்கள்.

இருவரது பக்கங்களிலும் பாடி வீடுகளுக்கு ஓரமாக அமைக்கப் பட்டிருந்த தற்காலிய வைத்தியக் கூடாரங்களில் அவர்களின் இரத்தம் துடைத்து காயங்களுக்கு மருந்திட்டு எலும்புகளை ஒழுங்காக்க வைத்தியர்கள் ஆயத்தமாக நின்றனர்.

சிறு சிறு காயங்கள் அடைந்தோர் அன்றிரவே அதற்கு மருந்திட்டுக் கட்டுப்போட்ட பின்னர் பாரிய வலியையும் பொருட்படுத்தாது மறுநாள் யுத்தகளம் செல்லத் தயாராகினர்.

ஒருவரிடமும் வாழும் ஆசையைக் காணவில்லை.

எல்லோருக்கும் மற்றவரை அழிக்கும் வெறி, யுத்தத்தில் அழியும் வெறி, அந்த வெறி மயக்கத்திலேயே யுத்த சூழல் அவர்களை வைத்திருந்தது.

சிலர் பகற்பொழுதில் தாம் கொன்ற மற்றவர்களைப் பற்றியும், அவர்கள் வீழ்ந்த விதம் பற்றியும் விளக்கினர்.

சிலர் தமக்கு வந்த ஆபத்துக்களைத் தாம் தடுத்த விதம் பற்றிப் பேசினர், சிலர் போர் தந்த அதிர்ச்சியில் ஒன்றும் பேசாது மற்றவர் சொன்னதைக் கேட்டபடி நின்றனர்.

சிலர் எங்கோ வெறித்துப் பார்த்தபடி தம் மனைவி, மக்களை, உற்றார், உறவினரை எண்ணியபடி புழுங்கி, நாளையும் போர்க்களம் செல்லும் அருவருப்பில் நின்றனர்.

ஒவ்வொரு பகலும் யுத்த மோதலுக்கும் ஒவ்வொரு இரவும் உயிர் நீத்தாருக்குமான ஞாபகச் சடங்குகளுக்கும் உரித்தாகி விட்டன.

தினமும் சகோதரர்களும், பிள்ளைகளும், இரத்த உறவு கொண்டோர்களும் இறந்து கொண்டே வந்தார்கள்.

யுத்தத்திற்கு

பாண்டவர்கள் கௌரவர்கள் என்ற பேதமில்லை,

அறிஞர், பாமரர் என்ற பேதமில்லை,

முதிர்ந்தோர், இளையோர் என்ற பேதமில்லை,

சொத்துடையோர் இல்லாதோர் என்ற பேதமில்லை.

இறந்த உடலுக்குரிய சடங்குகள் ஒரு பக்கம் நடக்கையில் அவன் உடமைகள் நதியில் வீசி எறியப்பட்டன.

அடையாளம் காணமுடியாத உடல்களை கழுகுகளும், நாய்களும், நரிகளும் உண்ணுகின்றன.

இரவு வேளைகளில் சாவுச் சடங்குகளுக்காக ஒன்று கூடுகையில் வீரர்களின் முகங்கள்

இறுகிப் போயிருக்கின்றன.

கண்கள் தாழ்ந்திருக்கின்றன.

மூன்று தலைமுறையினர் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்

பீஷ்மர், துரோணர் போன்ற வயது முதிர்ந்தோர்.

தருமர், துரியோதனன் போன்ற நடுத்தர வயதினர்.

அபிமன்யு, கடோத்கஜன், இலக்கணகுமாரன் போன்ற இளைஞர்கள்.

இலக்கணகுமாரன் அபிமன்யுவால் இறந்ததைக் கேள்வியுற்ற துரியோதனன் புத்திர சோகத்தில் உடல் குலுங்கக் குலுங்க அழுதான்.

அபிமன்யுவின் இறப்பினைக் கேள்வியுற்ற அர்ச்சுனன் தலையிலே அடித்துக் கொண்டு அழுதான்.

கடோத்கஜனின் இழப்பில் வீமன் கதறிய கதறலில் அவன் உடல் குலுங்கிக் குலுங்கிச் சோர்ந்தது.

மகனைப் பறிகொடுத்த சகுனியின் அழுகை பலரை வியப்பில் ஆழ்த்தியது.

தந்தையான துரோணரை இழந்த அசுவத்தாமாவின் அலறல்.

உத்தரனை இழந்த விராட மன்னனின் அழுகை.

யுத்தகளத்தில் வீரர்களின் புலம்பல்.

மன்னர்கள் மட்டுமா அழுதனர்,

தம் மக்களை இழந்த, சோதரனை இழந்த படைவீரர்களும் அழுகிறார்கள்.

மன்னருக்கு மட்டுமா உணர்வுகளும், துயரங்களும்?

ஆரம்பத்தில் யுத்தம் பூர்சிரவஸக்கு ஆர்வமாகத்தானிருந்தது. ஆயிரக்கணக்கான படை வீரர்களையும், யானை குதிரை தேர்களையும் பல்லாயிரக் கணக்கான படைக் கலங்களையும் கண்டு பரவசப்பட்டு விக்கித்துப் போனார் பூர்சிரவஸ். ஆனால் ஆயிரக் கணக்கான மக்களின் இறப்பும், அலறலும், இரத்தமும் அவருக்குப் பின்னால் அதிர்ச்சியைக் கொடுத்தன. துரியோதனன், வீமன், அருச்சுனன், சகுனி ஆகியோர் தம் புதல்வரைப் பறிகொடுத்து அழுது புலம்பியதைக் கேள்விப்பட்ட போது இன்னும் சோர்ந்துவிட்டார்.

போர் வீரர்களுக்குரிய சமையல் பரிசாரகனாக நியமிக்கப்பட்டிருந்த அவர் போர் தொடங்கி எட்டாம் நாளில் துரியோதனன் பக்கத்தினரின் வைத்திய கூடாரத்திற்கு மாற்றப்பட்டிருந்தார்.

கையிழந்து காலிழந்து, கண்ணிழந்து படுகாயமடைந்து கௌரவர் பக்கம் சார்ந்த வீரர்களைக் கண்ட போது அவர் மனம் மிகவும் தளர்ந்து விட்டார்.

ஒன்பதாம் நாட் போரில் அவரது இரண்டு மருமகன்மாரும், பத்தாம் நாள் போரில் மூன்றாவது மருமகனும் இறந்தது கேட்டு அவர் மனமுடைந்தே போனார்.

குவியலோடு குவியலாக அவர்களின் உடல்களும் எரிக்கப்பட்டு விட்டன.

ஒவ்வொரு நாளும் யுத்தச் செய்திகளை கேள்விப்படுவார்.

பீஷ்மர் துரியோதனன் படைக்குத் தலைமை தாங்கினார். வெல்லற் கரிய அந்தக் கிழவரின் தலைமையிலே துரியோதனன் வெற்றிவாகை சூடுவான் என பூர்சிரவஸ் நம்பியிருந்தார். ஆனால் அருச்சுனனின் அம்பால் அவர் வீழ்த்தப்பட்டார் என்ற செய்தி பூர்சிவஸைத் தடுமாற வைத்துவிட்டது.

துரோணர் வீழ்ந்து விட்டார். சிகண்டி அவர் தலையை வாங்கி விட்டான் என்ற செய்தி பூர்சிரவஸை மேலும் நிலை குலைத்ததுடன் துரோணரின் இறப்புக்குத் தருமரின் பொய்யே காரணம் என்று கதை வந்த போது அவர் திக்பிரமை அடைந்துவிட்டார்.

யுத்தம், தர்மவான்களையே பொய் பேச வைத்துவிடுகின்றதா?

ஒருநாள் தட்டியிலே தூக்கிவரப்பட்ட குற்றுயிரான வீரர்களுள் பூர்சி ரவஸ் தன் மகன் இருவரையும் கண்டார்.

ஒருவன் தன் வலது கரத்தை இழந்திருந்தான். மற்றவனின் நெஞ்சிலே அம்பு பாய்ந்து உயிர்போகும் நிலையில் திணறிக் கொண்டிருந்தான்.

இரண்டாவது மகன் இறந்து விட்டான்.

பூர்சிரவஸம் துரியோதனன் போல, வீமன் போல ஓவென்று மகனைக் கட்டிக் கொண்டு அழுதார்.

மற்ற மகன் அருகில் விடிய விடிய விழித்திருந்து அவனைக் கவனித்தார். தந்தையும் மகனும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. இருவர் கண்களிலுமிருந்து நீர் பெருகியபடியிருந்தது.

மறுநாள் பகல்பொழுதில் அம்மகனும் அதிக உதிரப் பெருக்குக் காரணமாக இறந்து போனான்.

இரு மகன்மாரையும் இழந்த பூர்சிரவஸக்கு அதற்குப் பிறகு யுத்தகளத்தில் பெரிய ஆர்வம் இருக்கவில்லை, சோர்வின் உச்சத்திற்கே வந்துவிட்டார்.

துரியோதனன் பக்கத்தில் சேனாதிபதிகளாக நின்ற கிருபர், துரோணர், சல்லியன், ஜயத்ரதன், சுதக்சினன், கிருதவர்மன், பாகுவிதன், கர்ணன், சகுனி ஆகிய சேனாதிபதிகள் மாண்ட செய்தி பூர்சிரவஸின் மனதில் பயத்தையும் சோர்வையும் ஏற்படுத்தியிருந்தன.

கர்ணனின் வீழ்ச்சி பூர்சிரவஸை மேலும் கலங்கடித்து விட்டது.

அவன் குந்தியின் மகன் என்ற இரகசியம் பரகசியமான போது பூர்சிரவஸ் உறவுகளையும்;, பந்தங்களையும் புத்திர பாசங்களையும் பிய்த்தெறியும் இப் போரில் மிகுந்த வெறுப்படைந்தவரானார்.

துரியோதனன் குரு சேத்திரத்தை விட்டு அகன்றுவிட்டான் என்ற செய்தி படைவீரர்கள் மத்தியில் நிலை குலைவை ஏற்படுத்தி இருந்தது.

பதினெட்டாம் நாள் துரியோதனன் வீமனால் கொல்லப்பட்டதுடன் பாரதப் போர் முடிவுற்றது.

துயரமும் சோகமும் இழப்புக்களுமாக வீரர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினர்.

பூர்சிரவஸ் அத்தினாபுரத்திலுள்ள தன் வீட்டுக்கு ஒரு நாள் மாலைப் பொழுதில் யுத்த களத்திலிருந்து சோர்வுடன் வந்து சேர்ந்த போது அவரது மகள்மாரும் மருமக்களும் தேம்பி அழுதுகொண்டே அவரின் கை கால்களைப் பிடித்துக் கொண்டனர். பேரப்பிள்ளைகள் காரணம் தெரியாமல் அவரைப் பார்த்து அழுதபடி நின்றனர்.

பூர்சிரவஸின் வீட்டில் மட்டுமா இந்நிலை?

இல்லை.

ஆரியவர்த்தத்தின் எல்லா வீடுகளிலும்

இதே அழுகை ஒலியும்,

துயர கீதமும் தான்.

# 9



போர் முடிந்து ஒரு மாத காலமாகிவிட்டது.

போர்ச் சூழலிருந்து மக்கள் மனம் மெல்ல மெல்ல விடுபட ஆரம்பித்திருந்தது.

தருமனை அத்தினாபுர ராஜ்சியத்தின் அரசனாக முடி சூட்டுவதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன.

அத்தினாபுரத்தின் தருமனின் அரசாட்சி அரசுயந்திரங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

துரியோதனின் அனுதாபிகள் கலகம் செய்யக்கூடும் என்ற ஐயத்தில் அவர்களைக் கண்காணிக்கவும், கைது செய்யவும் முடிந்தால் அழிக்கவுமான உளவுப்படை உருவாக்கப்பட்டிருந்தது.

கௌரவர்களின் சொத்துக்களும் அடிமைகளும் பாண்டவருக்குரியதாகிவிட்டது. தம்முடன் இணைந்து சண்டையிட்ட அரசர்கட்கு அவற்றின் சில பகுதிகளை அள்ளி வழங்கினர் பாண்டவர்.

அத்தினாபுரத்தினின்ற துரியோதனாதியோரின் செல்வங்களை யானைகளிலும் பல்லக்குகளிலும் தம் நாடுகட்கு செல்லும் அரச பரிவாரம் எமுத்துச் செல்வதைப் பார்த்த அத்தினாபுர மக்கள்

துரியோதனனிடம் அடித்த ஒரு பகுதியை மற்றவர்க்கும் பாண்டவர்கள் பங்கிடுகிறார்கள்

என்று அக்கம் பக்கம் பார்த்துவிட்டு இரகிசயமாகத் தமக்குட் பேசிக் கொண்டனர்.

ஓர் அரசு வீழ்ந்து விட்டது. அதனுடைய இடத்திற்கு இன்னொரு அரசு வந்து விட்டது.

இந்நிலையில் தான் யுத்த முடிவின் பின் அத்தினாபுரம் வந்தான் சார்வாகன்.

நடந்தேறியவை அனைத்தும் அவனுக்குப் பெரும் சினத்தை மூட்டி யிருந்தது. அரசு போட்டியிலே மக்கள் பகடைக்காய்களாக்கப்படுவதும், அரசுக்குச் சார்பாக அறிவு என்ற போர்வையில் பிராமணதர்மம் துணை நிற்பதும் அவனுக்கு மிகத் தெளிவாகப் புரிந்திருந்தது.

தனக்குப் புரிந்தது மக்களுக்குப் புரியவில்லையே என்ற

மனக்கொதிப்பு,

ஆதங்கம்,

கோபம்,

துக்கம்

மிகப் பெரிதாக எழும் ஓர் பேரசுப் பெருக்கத்தின் முன்னால் தான் ஒரு தூசு என்பதை அவன் அறிந்திருந்தாலும் உண்மை அறிவு என்கிற மாபெரும் ஆயுதம் தன் பக்கம் மாத்திரமே உண்டு என்பதை அவன் தீர்க்கமாக அறிந்திருந்தான்.

இவ்வாயுதத்தை ஏற்கும் பக்குவத்தை மக்களுக்கு ஏற்படுத்துவதே தனது பிறப்பின் பயன் என்பதை அவன் உணர்ந்தான்.

இதற்கான மரணம் என்ற வெகுமதியை புதிய அரசு தனக்குத் தரும் என்பதும் அவனுக்குத் தெரியும்.

இந்தச் சூழலிலேதான் அத்தினாபுர நகரத்தின் நான்கு திசை வீதிகளும் சந்திக்குமிடத்தில் தன் மூன்றாவது குரலை அவன் ஒலிக்க ஆரம்பித்தான்.

பூர்சிரவஸம் அவன் குரலை அவதானித்தார்,

மக்களே! மக்களே

என்று சார்வாகனன் அடிக்கடி விழித்தமை அவன் மீது அவருக்கு மிகுந்த பிரியத்தை ஏற்படுத்தியிருந்தது.

மனித உயிர்கள் அழித்தொழிக்கப்படுவதை

அழிப்பின் போது மனித உயிர் படும்வேதனையை

அரச போட்டியில் மனிதர்கள் வீணே அழிந்ததை

அவன் கடுமையாக சாடினான்.

சிலரது அந்தரங்க ஆசைகளின் வெளி வடிவமே யுத்தம் என்றான்.

இனியும் யுத்தம் நிகழக்கூடாது, மனிதகுல வரலாற்றில் இருந்து அது அகற்றப்பட வேண்டும் என்று உணர்ச்சி பொங்கக் கூறினான்.

அவன் சொற்களுக்கு கட்டுப்பட்டு நின்ற மக்கள் கூட்டத்துள் பாண்டவ அரசின் உளவுப் படையினரும் நின்று கொண்டிருந்தனர்.

அரசுக்கு எதிராகவும், ராஜ்ய பாரமேற்கப்போகும் தர்மனுக்கு எதிராகவும் காலையிலிருந்து பேசி நிற்கும் இவனைக் கண்காணித்தபடி அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

பாண்டவர்கள் பாண்டவர்கள்

என்ற சலசலப்பு மக்களிடம் எழுந்தது.

மக்களை விலக்கியடிப குதிரை வீரர்கள் முன்னால் வர பின்னால் வந்த இரதங்களில் பாண்டவர் தங்கள் ராஜபாட்டையால் வந்து கொண்டிருந்தனர்.

விலகுங்கள்! விலகுங்கள்! பாண்டவர்கள் வருகிறார்கள்

என்று மக்களை விலக்கியபடி குதிரை வீரர்கட்கு முன்னால் மெல்ல ஓடியபடி சென்றனர் முன்னணிக் காவலாளர்கள்.

முதலாவது இரதத்திலே தருமனும் பாஞ்சாலியும் இருந்தனர்.

இரண்டாவது இரதத்திலே கிருஷ்ணனும் வீமனும் அருச்சுனனும் இருந்தனர்.

மக்கள் பாண்டவரையும், அவர்களது ரதங்களையும் நோக்கினர்.

கூட்டத்தினருள் ஒரு சிலர் கைகளை அசைத்தனர், இன்னும் சிலர் எவ்வித உணர்ச்சியுமின்றி அவர்களை வெறித்துப் பார்த்தபடி நின்றனர். சார்வாகனன் நின்ற இடத்தை இரதங்கள் தாண்டின.

முதல் இரதத்திலே தர்மன் இருந்தான்.தர்மனை சார்வகன் வெறித்து நோக்கினான்.தர்மனும் சார்வாகனை அவதானித்தான்

இருவர் கண்களும் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டன.

சார்வாகன் கண்களில் கோப நெருப்பு

''தர்மனே உதிரக் கறையுடன் நீ மணிமுடி தரிக்கப் போகின்றாய், மக்களை நசுக்கும் அரசை மீண்டும் உருவாக்கப் போகிறாய்''

வார்த்தைகளில் புயல் வீச கண்களால் வெறுப்பை உமிழ்ந்தபடி சார்வாகன்தொடர்ந்தான்

''இலட்சக் கணக்கான மக்களைக் கொன்றும் இன்னும் உனக்கு இரத்த வெறி தீரவில்லையா? முடி சூடியதும், புரோகிதர் துணையுடன் அஸ்வமேத யாகம் செய்வாய். உன் குதிரையை உலகெங்கும் அனுப்புவாய், உன் பிரதாபங்களை அதன் நெற்றியில் எழுதி நானே பேரரசன் எனக்கு அடங்க நினைப்போர் குதிரையை உங்கள் நாட்டுக்குள் அனுமதியுங்கள். அடங்க விரும்பாதோர் சமர் புரியுங்கள் என்பாய். பிறகு என்ன

போர்! மீண்டும் போர்! அழிவு, பிறகும் அழிவு.

உன் அரசப் பெருக்கத்திற்கு இவ் ஆரியவர்த்த மக்களை மீண்டும் மீண்டும் பலி கொடுக்கப் போகிறாயா?

உனக்குப் பேர் தானா தருமன்?''

உரத்த குரலிலே சார்வாகனன் கூறினான்.

தருமன் மீதும், புதிய அரசு மீதும் அவன் கொண்ட வெறுப்பு அவன் வார்த்தைகளிலும் தொனிகளிலும் மாத்திரமல்ல, தருமனை அவன் பார்த்த அருவருப்பான பார்வையிலும் தெரிந்தது.

தருமனை அக்குரல் அசைத்து விட்டது,

சார்வாகனனின் கண்களும், தர்மன் கண்களும் சந்தித்துக்கொண்டன

ஒரு உண்மையினைப் பயமின்றி சார்வாகன் எடுத்துக் கூறுவதை உள்வாங்கிய தர்மன் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

எல்லோருடைய ரதங்களும் ஒரு கணம் அவ்விடத்தில் நின்றன.

''தர்மா நீயும் உன் மனைவியும் லட்சக்கணக்கான மக்களைப் பலி வாங்கியவர்கள், உங்கள் ஆசைக்கும், சபதத்திற்கும், பலியான உயிர் களின் கணக்கு உங்களுக்குத் தெரியுமா? அந்த உயிர்களின் சொந்தம் பந்தம் இன்று படும் வேதனை புரியுமா? உனக்கு தேசத்திற்கு அதிபதியாக உரிமை இல்லை, மீண்டும் மீண்டும் மீண்டும் மக்களை அழிப்பாய்.

உதிரக்கறை படிந்த உனக்கேன் அரசு?''

அந்தக் குரலின் வன்மையை தருமன் அவதானித்தான்,

அது அவனைக் குத்திக் கிழித்ததாயினும் அதில் உண்மை இருப்பது தருமனுக்குத் தெரியும். ஒரு மாத காலமாக இதே வினாக்களைத் தான் தருமனின் மனம் எழுப்பியபடி இருந்தது.

இத்தனை மக்களையும் கொன்றா நான் இந்த முடியைச் சூட வேண்டும்

வரலாற்று விதிக்குள் சிக்கிக் கொண்ட தருமனுக்கு அத்தோடு அடிபட்டுச் செல்வதை விடத் தப்பிக்க வழி தெரியவில்லை.

''தருமா! உன் மேனியில் வீசும் பிண நெடியை என்னால் பொறுக்க முடியவில்லை. போ! என் முன் நிற்காதே''

சார்வாகனன் தன் வெறுப்பெல்லாம் திரட்டி தர்மன் முன் எறிந்தான்.

தர்மன் அவன் கேள்விக் கணைகளைத் தாங்கியவாறு அவனைப் பார்த்துச் சொன்னான்.

''துறவியே நான் நிர்ப்பந்தத்தின் பொருட்டே அரசபாரம் ஏற்கிறேன். பாரதப் போரை நிறுத்தவே நான் முயற்சித்தேன், ஐந்து ஊராவது தாருங்கள் என்று கேட்டேன், ஒன்றும் நடக்கவில்லை.''

தலை குனிந்தபடி தர்மன் கூறினான்

போர் நிர்ப்பந்தம், அரசபாரம் நிர்ப்பந்தம், தொடரப் போகும் ஆட்சியும் நிர்ப்பந்தம்.

தர்மனுக்கு தன் வழி தெளிவாகத் தெரிந்தது.

வீமனின் முகத்திலே பயங்கரமான ஆவேசம்.

அண்ணனை எதிர்த்துப் பேசும் இவனை அழிக்க வேண்டும்

வாளுடன் எழுந்த வீமனை கிருஷ்ணன் கையமர்த்தினான்.

இப்போது நீர் பழைய வீமன் அல்ல, புதிய ஆட்சியின் ஓர் முக்கிய உறுப்பினன், உன் சொற்கள் மக்கள் மத்தியில் உமக்கும் உன் ஆட்சிக்கும் எவ்வித பங்கத்தையும் ஏற்படுத்தி விடக் கூடாது.

அவனை அழிக்கும் பணியை மக்களையே செய்யப் பண்ண வேண்டும்.

மக்களெல்லாம் அவன் பேச்சில் கட்டுண்டு கிடக்கிறார்களே

ஆத்திரப்பட்டான் அருச்சுனன்.

அனைவரையும் கையமர்த்திய கிருஷ்ணன்.

ரதங்கள் புறப்படட்டும் என்று குரல் கொடுத்தான்.

அனைவரின் ரதங்களும் புறப்பட்டன.

சார்வாகனனின் சத்தியக் குரலுக்கு அஞ்சி ஓடுவது போல அந்த மூன்று ரதங்களும் வேகமாக அத்தினாபுரத்தின் தருமனின் அரண்மனை நோக்கி வேகமாகச் சென்றன.

# 10



சார்வாகனின் ஆட்சி எதிர்ப்புக் குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

சிறிது நேரங்களில் சார்வாகனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு நின்ற சனக்கூட்டத்தின் தொகை மும்மடங்கானது.

மிகுந்த சனக் கூட்டத்தினரைக் கண்ட சார்வாகனின் உற்சாகம் கூடியது.

தன் கருத்துக்களுக்கு மக்கள் செவி சாய்க்கிறார்கள் எனக் கண்ட சார்வாகனனின் கண்டனத் தொனிகள், கிண்டல் உரைகள் மேலும் மேலும் கூடின.

பூர்சிரவஸ் மனம் சங்கடப்பட்டது.

திடீரென சனக்கூட்டம் கூடியமை அவருக்குச் சந்தேகத்தைக் கிளப்பியது.

அவர் சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல சனக் கூட்டத்துள் இருந்து வந்தது ஒரு குரல்.

டேய் சார்வாகா! தர்மத்தை நிலைநிறுத்த நடந்த யுத்தத்தை அதர்ம யுத்தம் என்றா கூறுகிறாய்?

சார்வாகன் பதில் சொன்னான்.

அடே முழு மூடா! யுத்தம் என்றாலே அதர்மம் தானடா

யுத்தம் என்று தோன்றியதோ அன்றே அதற்கான எதிர்ப்புக் குரலும் தோன்றிவிட்டதடா! அரசுகள் தானடா யுத்தத்தை நடத்துகின்றன.

டேய் சார்வாகா! அரச நிந்தனையை நிறுத்து

தருமனைக் குறை கூறாதே

பாஞ்சாலியைக் குறை சொல்லாதே

வைதிக மதத்தை இகழாதே

புரோகிதர் வசைமாரியை நிறுத்து

நாலாதிக்கிலும் இருந்து குரல்கள் வரத் தொடங்கின.

காலை முதல் தன் பேச்சை அதிக எதிர்ப்பின்றி கேட்டுக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் இப்போது ஆக்கிரோஷத்துடன் எதிர்ப்பதன் பின்னணியை சார்வாகனன் புரிந்து கொண்டான்.

இவன் துரியோதனனின் கையாள், அரசுக்கு எதிராகக் கலகம் புரியும் கலகக்காரன்

கலகக்காரன்!

கலகக்காரன்!

துரோகியைக் கொல்லுங்கள்

துரோகியைக் கொல்லுங்கள்

சனக்கூட்டம் தத்தளித்தது.

சார்வாகனன் மௌமானான். அவன் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை,

அவன் நினைத்தது நடந்து விட்டது.

கூட்டத்துள் நின்ற ஒருவன் யாக காரியங்களுக்காக வைத்திருந்த நெய்யை சார்வாகன் தலை மீது ஊற்றினான்.

சனக்கூட்டத்தினர் சிலர்

ஐயோ! ஐயோ அவரை ஒன்றும் செய்ய வேண்டாம்

என்று குரல் எழுப்பினர்.

பூர்சிரவசிக்கு சார்வாகனைத் தெரியவில்லை. கூட்டம் அவனை மறைத்துக் கொண்டது.

திடீரென ஓர் நெருப்புச் சுவாலை எழுந்தது.

சார்வாகன் எரிந்து கொண்டிருந்தான்.

சார்வாகனின் உண்மை கலந்த சமாதானத்தின் தொனி காலையில் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோரின் மனங்களில் ஒலித்தபடி இருந்தன.

எரிந்து கொண்டிருக்கும் சார்வாகனின் சடலத்தைக் காப்பாற்ற வழி தெரியாது அவர்கள் திக்பிரமையுடன் நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் மனங்களை சார்வாஹன் வார்த்தைகள் அக்கினி ஜுவாலை யாகப் பற்றிக்கொண்டன

அவர்கள் மனங்கள் குருசேத்திர களங்களாயின.

# சார்வாகன் பற்றி ஷ்ரீனாஹறக்
# நீட்சி பெறும் சொற்கள்

அமைதியான நீர்ப்பரப்பில் ஒரு கல்லை விட்டெறிந்தால் ஒரு திடீர் அதிர்வோடு அந்த அமைதி கலைந்து அலையலையாய்ப் படர்ந்துசெல்வதுபோல் சில எழுத்துக்கள் நம் மனதுக்குள் பெரும் அதிர்வை, எண்ண அலைகளை எழுப்பிவிடுகின்றன. அத்தகைய ஒரு படைப்பே பேராசிரியர் சி. மௌனகுருவின் சார்வாகன். 2000 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இக்குறுநாவலை முகநூலினூடே வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மகாபாரதத்தில் வரும் ஒரு கதாபாத்திரத்தை வைத்து, இக்காலத்துக்கும் பொருந்துமாப்போல் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட ஓர் அற்புதமான கதை, அது. அதனைப் பலமுறை வாசித்து முடித்துவிட்ட பின்பும், அப்படைப்பு என்னுள் எழுப்பிய உணர்வலைகள் பலதிறப்பட்டவை. வாசித்து முடித்த சொற்களின் கனதியால் எழுந்த எண்ணங்கள் ஏராளமான புதுச் சொற்களை உருவாக்கியபடியே இருந்ததை உணர்ந்தேன். ஒரு புராதனக் கதையின் ஒரு கூறாய் எழுந்த இக்குறுநாவல், தான் கதைக் களமாகக் கொண்டிருக்கும் கௌரவர் பாண்டவர் அதிகார மோதல் தொடர்பான நேரடி நிகழ்வுகளுக்கு அப்பால், நம் காலத்துக்கு மிக இயல்பாகப் பொருந்தி வரக்கூடிய சமூக, அரசியல் விமர்சனம் கொண்டதாகவும், நவீன கால அரசியலை மறுவாசிப்புச் செய்வதான உணர்வை எழுப்புவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதனைப் பகிர எண்ணியதின் விளைவே இக்கட்டுரையாகும்.

மக்களையும் அவர்தம் வாழ்வையும் குவிமையப்படுத்தி, அவற்றையே முதன்மைப்படுத்தி, சுவர்க்கம், நரகம், தேவர் என்னும் அனைத்தையும் மறுதலிக்கும் இந்தியாவின் பழம் சிந்தனை மரபுகளில் ஒன்று சார்வாகம். மகாபாரதப்போர் நடைபெறுமுன்பும் அது நடைபெறப் போகும் தருணத்திலும் அதற்குப் பின்பும் போரின் தீங்குகளை எடுத்துக்கூறி, அதிகார வர்க்கங்களின் ஆதிக்க மோகத்துக்கு விலைபோய் பலிக்கடாவாகும் மக்களை எச்சரிக்கும் மனிதநேயமும் அறிவுத் தீட்சண்ணியமும் வாக்கு வன்மையும் நிரம்பியவனே சார்வாகன். அவனே இக்கதையின் நாயகன். மகாபாரதக் காலத்தே அன்றைய கலகக்

குரல்களின் மொத்த வடிவமாய் நின்று அதிகாரத் தரப்பைக் கேள்வி கேட்கும் மக்கள் பிரதிநிதியாய் கதாசிரியர் சார்வாகனை முன்னிறுத்து கின்றார்.

இக்குறுநாவலின் முதலாவது பகுதி குருஷேத்திரப் போர்க்களத்தைச் சித்திரிக்கின்றது. போர் ஓய்ந்தபின் இரத்தமும் நிணமும் பிணமும் நிறைந்த போர்க்களத்தின் கோரக்காட்சியை மயிர்க்கூச்செறியும் வகையில் ஆசிரியர் வர்ணித்துள்ளார். அதனை வாசித்துச் செல்லும் நம் மனக்கண் முன்னே கலிங்கத்துப் பரணியின் யுத்தகளக் காட்சியும், கலிங்கப் போர்க்களக் காட்சியும் மட்டுமின்றி முள்ளிவாய்க்காலும்கூட வந்து போவதைத் தவிர்க்க முடியவில்லை.

யுத்தத்தினால் நேரும் உயிரிழப்பு, பொருளிழப்பு, அங்கவீனர்களின் அவலம், அனாதைகளாய், அனாதரவான நிலையில் நிற்கும் குடும்பங்கள் என்பவற்றை ஆசிரியர் காட்சிப்படுத்தும் விதம் முப்பது வருடகால யுத்தம் பற்றிய செய்திகளையே கண்டும் கேட்டும் சோர்ந்து நொந்திருந்த மனதுக்கு மிக நெருக்கமானதாகவே உள்ளதில் ஆச்சரியம் ஏதுமில்லை எனத் தோன்றுகின்றது. சமாதானத்துக்கான யுத்தம், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான யுத்தம் என்று எவ்வளவுதான் நியாயங்கள் கற்பிக்கப்பட்டாலும், போர் எங்கு நடந்தாலும் யாருக்கிடையில் நிகழ்ந் தாலும் அது குரூரமானதுதான். அங்கே பலிக்கடாக்களாவது மக்கள்தாம் என்பதை இந்நாவல் நெடுகிலும் ஆசிரியர் வலியுறுத்திச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அடே முழு மூடா! யுத்தம் என்றாலே அதர்மம் தானடா என்ற சார்வாகனின் கூற்றையும்,

தோல்வியுற்றோர் முகமெல்லாம் சோர்ந்து கிடந்தன. வெற்றி பெற்றோரும் சோர்ந்தே இருந்தனர். வெற்றியோ தோல்வியோ போர் எனில் மிஞ்சுவது என்ன? இழப்பு, துயரம், சோகம் இவைதானே. எனும் கதாசிரியர் கூற்றையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

மேலும், ஆதிக்கச் சக்திகளின் அதிகாரப் போட்டியின் விளைவான யுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அடியாகத் தீர்வை நோக்கி நகர்வதை விரும்பாமல், அந்த யுத்தத்தின் மூலம் ஆதாயம் தேட முனைவோர் அதனைப் பல வகையிலும் நியாயப்படுத்தி, மக்கள்

மனங்களில் தமக்குச் சாதகமான மனநிலை மாற்றத்தை விதைக்கின்றனர். இதனையே,

அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அதிகாரமே அடிநாதம். ஆளும் கூட்டத்தினர் அதிகாரத்தை, கையில் எடுத்துக் கொள்கிறார்கள். அறிஞர் களும், இலக்கியங்களும், மதங்களும் அதிகாரத்திற்குச் சார்பாகவே யுள்ளனர். தம் கருத்துக்களால் மக்கள் மனதிலே அதிகாரத்தை ஞாயப் படுத்தும் மனோநிலையை உருவாக்கி விடுகிறார்கள். அதிகாரம் சார்ந்த கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. உருவாக்கப்பட்ட கருத்துக்களுக்கு மக்களும் அடிமைகளாகி விடுகிறார்கள் என்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

உண்மையில், இந்த நிலைமை அன்றைக்கு மட்டுமானதா என்றால், இல்லை. இன்றைய நூற்றாண்டிலும் இதுதான் நிலை. உலகின் ஏக வல்லரசாகத் திகழும் கனவில் உலகம் எங்கிலும் யுத்தத்தை ஏற்றுமதி செய்யும் அமெரிக்கா தனது இலக்கை அடையும் பொருட்டு செய்தி ஊடகங்கள், இணையம், சினிமா என்று சகல வளங்களையுமே தன் சார்புக் கருத்துருவாக்கத்துக்காகப் பயன்படுத்துகின்றது. பலஸ்தீன் நிலத்தை ஆக்கிரமித்த இஸ்ரேலின் நிலையும் இதுவே. இன்றுவரை ஆக்கிரமிப்பு இஸ்ரேல் மேற்கொண்டுவரும் குரூரமான அடக்கு முறைகளையும் அடாவடித்தனங்களையும் கேள்வி கேட்பார் இல்லை. உலகெங்கிலும் உள்ள சுதந்திரத்தை விழையும், அதற்கு மதிப்பளிக்கும் மக்கள் குழுமங்கள் அவ்வப்போது அவ்வநீதிகளுக்கு எதிராய்க் குரல் எழுப்பி வந்தாலும் அதிகாரமிக்க அரசுகள் அவற்றை இலகுவாக அடக்கிவிடுகின்றன. அவ் அரசுகளுக்குச் சார்பான கார்ப்பரேட் ஊடகங்களும் அதற்கு ஒத்து ஊதுகின்றன.

இலங்கையை எடுத்துக்கொண்டாலும் இதுவே நிலைமை. தனதே நாட்டின் குடிமக்களில் ஒரு சாராருக்கு எதிரான அப்போரை ஊக்கு விக்கவும் பெரும்பான்மை இன மக்களின் மனங்களில் யுத்தவெறியையும் வீரப்பெருமித உணர்வையும் ஊக்குவிக்கும் வகையிலும் பண்டைய சிங்கள அரசர்களின் வீரப்பிரதாபக் கதைகள் மீட்டுருவாக்கம் செய்யப் பட்டு சிங்கள சினிமாக்களாக வெளிவந்தன. சிங்களத் தேசியப் பெருமித உணர்வெழுச்சியூட்டும் பாடல்கள் பல புனையப்பட்டு மேடைகளில்

பாடப்பட்டன. இலக்கியங்கள் படைக்கப்பட்டன. அஹிம்சையைப் போதிக்க வேண்டிய பௌத்த ஆலயங்களிலே சிங்கள இனம், சிங்கள தேசம், அவை அழியும் நிலையில் உள்ளதால் அவற்றைப் பாதுகாப்பதே நம் சமயக்கடமை என்ற ரீதியிலான தேசிய இன உணர்ச்சி கிளர்ந்தெழும் வகையிலான பிரசங்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேடைகள் தோறும் அவை முழங்கப்பட்டன. கொல்லாமை அறத்தைப் போதிக்க வேண்டிய பிக்குகள் யுத்த சன்னத்தராய்க் குழுமி இருந்த இராணுவத்தினருக்கு ஆசி கூறி, ஆயுதங்களுக்குத் தெளிக்கப் புனிதநீர் வழங்கி நின்றனர். ஆக, இங்கே அறமும் அஹிம்சையும் ஆளும்தரப்பின் ஆதிக்கச் செல்வாக்கின் முன் விலைபோய் விட்டன என்பதையே இச்சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இலங்கையில் மட்டுமல்ல, எகிப்தை எடுத்துக்கொள்வோம். அடக்குமுறை இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த மக்கள் வெள்ளத்தைக் கொன்றுகுவிப்பது ஆகுமானதே என்று ஜெனரல் ஸிஸிக்கு ஆதரவாக போலி ஃபத்வா வழங்கிய இஸ்லாமிய மார்க்க அறிஞரின் பிழைப்புவாதப் போக்கை அண்மைய கால வரலாறு பதிவு செய்துள்ளது. சார்வாகன் குறுநாவலிலும் இத்தகைய அவலநிலையைக் காட்சிப் படுத்தும் கதாசிரியர், அதனை எதிர்த்துக் கண்டிக்கும் நீதியின் குரலாய்,

பாவிகளே உங்கள் அறிவின் அதிகாரத்தை ஏன் மக்களை அடக்கப் பயன்படுத்துகிறீர்கள்? ஆயுதம் ஏந்தி உயிர்பறிக்கும் அரக்கர்களுக்கு ஏன் நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்கள்? என்று சார்வாகனின் குரலைப் பதிவு செய்கின்றார்.

மேலும், மனிதர்கள் அனைவரும் சமமே என்ற கொள்கை உடையவர்கள் சாதி ஏற்றத் தாழ்வை எதிர்க்கவேசெய்வர். சாதிப் பாகுபாட்டைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த முனைவோர், தமது சுயலாபத்தின் பொருட்டே அதனைச் செய்கின்றனர் என்பது தெளிவு. மக்களைச் சாதியின் பெயரால் பிளவுபடுத்தி ஆதிக்கம் செய்து பயன்களைப் பெறவிழைவோரைச் சார்வாகனின் வழியே கடுமையாகச் சாடுகின்றார் கதாசிரியர்.

''யாராண்டால் என்ன? அவர்களின் பாதம் கழுவித் தம் வயிறு வளர்க்கும் இக்கூட்டத்தைப் பாருங்கள். அக்கினியை வளர்த்து ஆடுகளை அறுத்து அவியாக்கும் அறிஞர்களைப் பாருங்கள். தாம் படைக்கும்

அவியைத் தேவர்கள் வந்து சாப்பிடுவார்கள் என்று கதைவிடும் கயவர்களைப் பாருங்கள். இவர்கள் கட்டிவிட்ட கதைகள் தான் நான்கு வர்ணம்.'' என்றும்,

தர்மம் என்ற பெயரிலே அதர்மம் நடக்கின்றது..

வேத சூத்திரங்களின் துணையோடு

அதர்மம் தர்மமாக ஆதிக்கம் செலுத்துகின்றது.

நாலுவருண பாகுபாட்டையும் ஞாயப்படுத்துகிறது பிராமணதர்மம்.

அதற்கு எதிராக நான் குரல் தருகிறேன். என்றும் இடம்பெறும் சார்வாகனின் கூற்றுக்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். உண்மையில், இதனை சாதிப்பாகுபாட்டுக்கு எதிரான குரலாக மட்டும் கருத முடியவில்லை. மாறாக, இன, மத, மொழி, பிரதேச பேதங்களுக்கு அப்பால் அதிகாரத்துக்குக் கூஜா தூக்கி மக்களின் நலனைவிட தமது வயிற்றுப் பிழைப்பே பிரதானம் எனக் கருதும் இடைத்தரகர்கள், புரோகிதர்கள் அனைவரையுமே சாடும் நியாயத்தின் குரலாகவே அது ஒலிக்கின்றது எனத் தோன்றுகின்றது. இதனையே பாரதி, பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்று கூறிவைத்தான்.

இக்குறுநாவலில் ஆதிக்கமிக்க அதிகாரத் தரப்பைத் தொடர்ந்து கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கும் கலகக் குரலாக ஒலிக்கும் சார்வாகனின் கூற்றாக முன்வைக்கப்படும், அதிகாரம் சார்ந்த கருத்துக்கள் உருவாக்கப் படுகின்றன. உருவாக்கப்பட்ட கருத்துக்களுக்கு மக்களும் அடிமைகளாகி விடுகிறார்கள் என்ற கருத்து பலவகையிலும் முக்கியமானது. உண்மையில், இன ரீதியாகவோ மத ரீதியாகவோ அல்லது பிராந்திய ரீதியாகவோ ஒன்றை மற்றொன்று மிகைத்து அடக்க முனையும்போது, அதனை எதிர்ப்பின்றி இயல்பான ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்கேற்ற பொதுசன அபிப்ராயம் திட்டமிட்ட முறையில் ஸ்திரமாகக் கட்டமைக்கப்படுகின்றது என்பதை மேற்போந்த வரிகள் துல்லியமாக எடுத்துரைக்கின்றன. மேலே எடுத்துரைத்தவாறு சினிமா, கலை, இலக்கியங்கள் மட்டுமன்றி, தலைமுறை தலைமுறையாக இத்தகைய பிரிவினைக் கருத்தியல்கள் ஊடுகடத்தப்படும் அபாயகரமான ஒரு காலகட்டத்தை வரலாறு கடந்துகொண்டிருக்கின்றது. நம் நாட்டு அரச பாடப்புத்தங்களில் வரலாறு பதியப்படும் விதத்தையும் அவை மாணாக்கரிடையே எடுத்துச்

சொல்லப்படும் விதத்தையும் இதற்கு நல்லதோர் உதாரணமாகக் குறிப்பிடலாம். இதனை இன்னும் சற்று தெளிவுபடுத்துவதானால், ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு, ஆங்கிலேயப் படையெடுப்பு எனவும் சோழரின் படையெடுப்பு சோழ ஆக்கிரமிப்பு என்பதாகவும் பதியப் படுவதன் பின்னால் உள்ள அரசியலும், இந்திய வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் மொகாலயர் படையெடுப்பு என்பது இஸ்லாமியர் படையெடுப்பாகக் காட்டப்படுவதன் பின்னணி அரசியலும் ஆழ்ந்த கவனத்திற்குரியன. தமிழ் பேசும் மக்களை வந்தேறு குடிகளாகவே தொடர்ந்தும் நிறுவ முனைதல், இலங்கையின் பூர்வ குடிகளாக இருந்த இயக்கரையும் நாகரையும் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாகக் காட்டியுள்ளமை என்பனவும் இதனோடு வைத்து எண்ணத் தக்கதே. அமெரிக்க வல்லாதிக்க அரசும் அதன் நட்புநாடுகளும் ஆப்கானியரையும் ஆபிரிக்கரையும் அரபிகளையும் இதேபோல் கட்டமைத்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய, நிலைநிறுத்த முனையும் நிலையுடனும் இதனை ஒப்பிட்டு நோக்க முடியும்.

மேலும், துரியோதனனுக்குரிய அத்தினாபுர நகரம் பாண்டவர்கள் கைகளுக்கு மாறிவிட்டது. அதிகாரத்தைக் கைப்பற்ற இரண்டு அதிகாரக் கும்பல்களுக்குமிடையே நடந்த யுத்தத்தில் நீங்கள் மந்தைகளாக யாரோ ஒருவர் பக்கம் நிற்கின்றீர்கள். வெறியுடன் ஒருவரை ஒருவர் கொன்றீர்கள். வெறியடங்கியது, பாண்டவர் வென்றார்கள், மற்றவர்கள் தோற்றார்கள், மக்களும் தோற்றார்கள்; மக்களும் தோற்றார்கள் என்ற வரிகளும்,

வெற்றிக் களிப்பிலே பாண்டவர்கள் இருக்கின்றார்கள், வெற்றியா அது? சொந்த பந்தங்களின் பிணத்தின்மேல் கட்டப்பட்ட வெற்றியோர் வெற்றியா? ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட வெற்றி மகிழ்ச்சி தருமனின் முகத்திலே, அந்த யுத்தத்தை தர்ம யுத்தம் என்று ஞாயப்படுத்தும் கிருஷ்ணனின் வாதங்கள் வேறு எனும் வரிகளும் சகோதர யுத்தத்தின் கொடூரத்தையும் கைசேதத்தையும் நம் கண்முன் நிறுத்துகின்றன. யார் யாரின் பொருட்டோ சாதாரணர்கள் எல்லாவற்றை யும் இழந்து தவிக்கும் நிலையையும் மாறி மாறி ஆட்சிக்கட்டிலேறும் ஆளும் தரப்புகள் வெற்றிக் களிப்புடன் சகல சுகபோகங்களையும் துய்த்தபடி காலந்தள்ளப்போகும் யதார்த்தத்தையும் மிகச் சிறப்பாக

எடுத்துக்காட்டியுள்ளார், கதாசிரியர். நம் நாட்டுத் தேர்தல் களங்களையும் இவ்வரிகள் நினைவூட்டத் தவறவில்லை.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது, அதிகார இயந்திரத்தின் கைப்பாவைகளாய் மதம், கலை, இலக்கியம், கல்வி முதலான அனைத்துத் துறைகளும் கைகட்டிச் சேவகம் செய்யும் அன்றைய நிலையைச் சார்வாகனின் ஊடாகக் கண்ணுற்றாலும், அது இன்றைய உலக அரசியல் நடைமுறைகளோடும் அச்சொட்டாகப் பொருந்திவருவதை நாம் அடையாளம் காணமுடிகின்றது.

அதிகாரத்தின் முன் உண்மை பேசுதல் என்பது மிகப் பெரிய சவால் தான். அத்தகைய மனிதர்கள் அதிகாரபீடங்களின் கொடூரக் கரங்களால் அடக்கியொடுக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டாலும், வரலாற்றில் மகத்தானவர்களாய் அவர்கள் இடம்பெற்றுவிடுகின்றனர். அதிகார வர்க்கத்தை நோக்கி மக்களின் சார்பாகக் கேள்வி எழுப்பி, நடந்த அநீதிகளைக் கண்டித்த சார்வாகனும் ஆளும்தரப்பினால் பழிவாங்கப்படுகிறான்; பொதுமக்களின் போர்வையில் பிரசன்னமான அதிகாரத் தரப்பின் அடியாட்களால் உயிரோடு எரியூட்டிக் குரூரமாகக் கொலை செய்யப்படுகின்றான். என்றாலும், அவனின் குரல் காலத்தை வென்றும் நிலைத்து விட்டது. ஆம், மஹாபாரதக் கதையில் எங்கோ ஓர் ஓரத்தில் மறைந்திருந்த சார்வாகனின் கதாபாத்திரத்தின் வழியே பொதுமக்களின் சார்பான அவனது கலகக் குரலை, நீதிக்கான சாத்வீகக் குரலை மீண்டும் ஒலிக்கச் செய்த சி. மௌனகுரு நிச்சயம் பாராட்டுக்குரியவரே!

எளிய அழகிய தமிழ் நடையில், வாசிப்போரின் ஆர்வம் சற்றும் குன்றாத வகையில் கதையின் காட்சிகளை முன்னும் பின்னுமாகப் பொருத்தமாக நகர்த்தி ஒரு மேடை நாடகத்தைப் பார்ப்பதான உணர்வெழும் வண்ணம் தனது குறுநாவலை அவர் படைத்துள்ள விதம் சிறப்பானது. சமாதானத்தை விழையும் அனைத்து உள்ளங்களையும் இவ்வரிய படைப்பு தன்பால் ஈர்த்துக்கொள்ளும் என்பதோடு, இது நாடகமாக மேடையேற்றப்படுமானால் அக்குறுநாவல் சொல்லும் காத்திரமான செய்தி மக்களை மிக வேகமாகச் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

*(நன்றி: லறீனாஹக்கின்*

*நீட்சி பெறும் சொற்கள் கட்டுரைத் தொகுதி)*



பேராசிரியர் சி. மௌனகுரு நாடக ஆய்வு, தமிழியல் ஆய்வு, நாடக எழுத்து, நாடக வாக்கம் என்பவற்றில் ஈடுபட்டதுடன், இலக்கியப் படைப்பாளியாவும் இருந்தார். சிறுகதை, குறுநாவல், கவிதை, இசைப்பா என்ற வடிவங்களையும் ஆக்கியுள்ளார். அவரது மணிவிழா மலரில் வந்த சார்வாகன் என்ற குறுநாவல் இது.

- வெ. தவராஜா

அமைதியான நீர்ப்பரப்பில் ஒரு கல்லை விட்டெறிந்தால் ஒரு திடீர் அதிர்வோடு அந்த அமைதி கலைந்து அலையலையாய்ப் படர்ந்து செல்வதுபோல் சில எழுத்துக்கள் நம் மனதுக்குள் பெரும் அதிர்வை, எண்ண அலைகளை எழுப்பிவிடுகின்றன. அத்தகைய ஒரு படைப்பே பேராசிரியர் சி. மௌனகுருவின் சார்வாகன்....... எளிய அழகிய தமிழ் நடையில், வாசிப்போரின் ஆர்வம் சற்றும் குன்றாத வகையில் கதையின் காட்சிகளை முன்னும் பின்னுமாகப் பொருத்தமாக நகர்த்தி ஒரு மேடை நாடகத்தைப் பார்ப்பதான உணர் வெழும் வண்ணம் தனது குறுநாவலை அவர் படைத்துள்ள விதம் சிறப்பானது.

- லறீனாஹக்